விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 17 செவ்வாய்க்கிழமை (29.04.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 132







## வெடிப்பதற்குத் தயாரான நிலையிலிருந்த சக்தி வாய்ந்த குண்டு குருநாகலில் மீட்பு

(கொழும்பு)

குருநாகல் மாவட்டத்தில் உள்ள கல்கமுவ என்ற இடத்தில் நேற்றுக்காலை சக்திவாய்ந்த நேரக்கணிப்புக் குண்டு வெடிப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன்னதாக பஸ் ஒன்றிற்குள் இருந்து மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்கமுவ பஸ் தரிப்பிடத்திற்கு அருகில் உள்ள பகுதியிலிருந்தே இக்குண்டு மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இரண்டு 81 மி.மீ மோட்டார் குண்டுகள் ஒன்றாக இணைக்கப்பட்டு பஸ்ஸின் இருக்கைக்கு அடியில் காட்போட் பெட்டி ஒன்றிற்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப் படுகின்றது.

இக்குண்டுகள் வெடித்துச் சிதறுவதற்கான நேரமும் கணிக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## மலையகப் பகுதிகளில் மண் சரிவு ஏழு பேர் பலி; ஆறு பேர் படுகாயம்

(கொழும்பு)

மலையகப் பகுதிகளில் பெய்து வரும் அடைமழையால் 7 பேர் உயிரிழந்துள்ளனர். 6 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். களுத்துறை மாவட்டத்தில் இங்கிரிய என்ற இடத்தில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட மண்சரிவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 4 பேர் பெண்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. உயரமான பகுதியொன்றில் அமைந்திருந்த இவர்களின் வீடு முழுமையாக மண்ணில் புதையுண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களின் சடலங்கள் நேற்று காலை மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை (10 ஆம் பக்கம் பார்க்க)

# போர் தளபாடக் கொள்வனவுக்கு இலங்கைக்கு 100 மில். நிதியுதவி

## இந்தியா வழங்குகின்றது

(புதுடில்லி)

**இலங்கைப் பாதுகாப்புத் துறையினர் ஆயுதங்கள், போர் தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை (இலங்கை ரூபாவில் ஆயிரத்து 100 கோடி) வழங்க இந்தியா முன்வந்துள்ளது. குறைந்த வட்டியில் இக் கடன் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.** (10 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல்கட்டணம் மீண்டும் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக்கும்-திருகோணமலைக்கும்இடையிலான பிரயாணிகள் கப்பல் சேவைக்கான கப்பல் கட்டணம் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதியிலிருந்து 3 ஆயிரத்து 550 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தனக்கு அறிவித்துள்ளதாக யாழ் அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ச)

## உரும்பிராயில் நேற்று குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயில் நேற்றுக்காலை குடும்பஸ்தர் ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த தர்மலிங்கம் சிவநேசன் (வயது33) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவர் ஆவார்.

நேற்றுக்காலை 6.15 மணியளவில் தனது வீட்டிலிருந்து வெளியே வந்தபோது பலாலி வீதியில் நின்ற இருவர் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-3,4,5)

## வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்

(கொழும்பு)

வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஒன்று நிலைகொண்டுள்ளதால் நாட்டின் பல பாகங்களில் சூறாவளி அல்லது கடும் காற்று வீசக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளதாக வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு 600 கி.மீ வட கிழக்கில் இந்த தாழமுக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக கொழும்பு, கம்பஹா, கேகால, இரத்தினபுரி, நுவரெலியா, கண்டி, காலி மற்றும் களுத்துறை ஆகிய பிரதேசங்களில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்யும் எனவும் எனினும் இன்று பிற்பகல் நிலைமை சீராகிவிடும் என்றும் வானிலை அவதான நிலையம் மேலும் அறிவித்துள்ளது. (ச-5)

## யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 15 பேர் கல்கிசையில் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

கல்சிசைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலின்போது 15 தமிழ் இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 4 மணிமுதல் பிற்பகல் வரை மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போதே மேற்படி இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாகக் கல்சிசைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மகேஷ் பெரேரா தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களில் அதிகமானோர் யாழ்ப்பாணம் பருத்தித்துறை மற்றும் வல்வெட்டித்துறை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் கல்கிசைப் பொலிஸ் (10 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை மோதலில் 130 புலிகள் உயிரிழப்பு

### பலாலிப் படைத் தலைமையகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடந்த 23 ஆம் திகதி முகமாலையில் இடம்பெற்ற மோதலில் 130 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டுள்ளதாக பலாலி பாதுகாப்புப் படைகளின் தலைமையகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள்வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாதுகாப்பு படையினருக்கும் புலிகள் இயக்கத்தினருக்கும் இடையில் 2008.04. 23 ஆம் திகதி அதிகாலை முகமாலை மற்றும் கிளாலி பிரதேசங்களில் இடம்பெற்ற கடும் மோதலில் புலிகள் இயக்கத்தினருக்கு பெரும் இழப்புக்கள் ஏற் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்று இல்லை

யாழ்ப்பாணம்-திருகோணமலைக்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று நடை பெறமாட்டாது என யாழ் சிவில் நிர்வாக காரியாலய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலை காணப்படுவதனால் கப்பல் சேவை இடை நிறுத்தப்பட் டுள்ளதாக அவர் அறிவித்தார். இதேவேளை இன்று பயணத்தை மேற்கொள்வதற்காக பயணச்சீட்டை பெற்றவர்கள் நாளை பிரயாணத்துக்கான ஆயத்தங்களுடன் வருமாறு திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (ச)

## ஹெப்பிட்டிக்கொல்லாவவில் கிளைமோர்த் தாக்குதல் ஒருவர் பலி

(அநுராதபுரம்)

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள ஹெப்பிட்டிக்கொல்லாவ யக்காவெவப் பகுதியில் நேற்று மாலை நடைபெற்ற கிளைமோர்த் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

காட்டுப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த பொது மகன் ஒருவரை இலக்கு வைத்தே இக் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

கொல்லப்பட்டவர் விவசாயி எனத் தெரிவிக்கப்படுகின்றது. இச் சம்பவத்தையடுத்து அப் பகுதியில் ஊர்காவற்படையினர்தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

இக் கிளைமோர்த் தாக்குதல் குறித்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## அமைச்சர் மில்றோய் குழு மடுவுக்கு விஜயம்

(மன்னார்)

படையினரால் மீட்கப்பட்ட மன்னார் மருதமடுமாதா தேவாலயப்பகுதிக்கு கடற்றொழில், நீரியல் வளத்துறை அமைச்சர் மில்றோய் பெர்ணாண்டோ தலைமையிலான குழுவினர் நேற்று விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறிந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன்போது (10 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.சட்டத்தரணிகளின் விவகாரம்
# நீதிச் சேவை ஆணைக்குழு செயலாளரின் அறிவுறுத்தலின் பின்னர் முடிவு வெளியாகும்
# யாழ்.மாவட்ட நீதிவான் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு சட்டத்தரணிகளின் பகிஷ்கரிப்பு தொடர்பாக பத்திரிகை ஒன்றில் வெளிவந்த விளம்பரம் குறித்தும் சட்டத்தரணிகளின் பகிஷ்கரிப்பு தொடர்பாகவும் தமக்கு எதுவும் தெரியாது என யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் யாழ்.சட்டத்தரணிகள் சங்க தலைவி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் தலைமையிலான சட்டத்தரணிகள் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி பி.சுவர்ணராஜாவைச் சந்தித்துதமது கோரிக்கையைஎடுத்துக்கூறினர்.

அதனைத் தான், நீதிச் சேவை ஆணைக் குழுவிடம் எடுத்துரைத்து தமது முடிவைத் தெரிவிப்பதாக மேல் நீதிமன்ற நீதிபதி கூறியிருந்தார்.

எனினும் மேல் நீதிமன்ற நீதிபதியின் முடிவை அறியாது இவ் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவிடம் நேற்றுத் தொடர்பு கொண்ட போது, இவ் விடயம் தொடர்பாக நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் அறிவுறுத்தல், மேல் நீதிமன்ற நீதிபதிக்கு அனுப்பப்படும் எனவும் அது யாழ்.மாவட்ட நீதிபதி இ.த. விக்னராஜாவுக்கும் அனுப்பப்படும் எனவும் சட்டத்தரணிகளின் கோரிக்கைகள் தொடர்பாக முடிபெடுக்கும்போது சட்டத்தரணிகள், நீதிமன்ற ஊழியர்கள் பிரதானமாக பொது மக்களின் தேவைகளையும் நலனையும் நீதிபதிகளின் கவனத்திற் கொண்டு முடிபெடுக்கவேண்டுமெனவும் அறிவுறுத்தியுள்ளார்.

எனவே நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் அறிவுறுத்தல் கிடைத்தவுடன் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி பி.சுவர்ணராஜா முடிபை வெளியிடுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-5)

## மூலிகை மருத்துவக்கண்காட்சி இன்றும், நாளையும் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

கைதடி சித்த மருத்துவத்துறையின் மூலிகை மருத்துவக் கண்காட்சி இன்றும் நாளையும் மட்டுமே நடைபெறும் என சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இக்காண்காட்சியை பார்வையிடுவதற்காக காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரை பிரயாணக் கஷ்டங்கள் தவிர்க்கப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## பிலியந்தல குண்டுத் தாக்குதலில் பலியானோருக்கு நட்டஈடு

(கொழும்பு)

பிலியந்தலயில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற பஸ் குண்டுவெடிப்பில் பலியானோருக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வீதமும் காயமடைந்தோருக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதமும் நட்டஈடு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

குண்டுவெடிப்பில் பலியானோரின் சொந்தக்காரர்களிடம் முதலில் 50 ஆயிரம் ரூபாவை உடனடியாக கையளிக்க அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது.

மரண அத்தாட்சிப் பத்திரம் மற்றும் ஏனைய தஸ்தாவேஜுகள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மீதித் தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தோருக்கு உச்ச நட்டஈடாக வழங்கப்படவுள்ள 50 ஆயிரம் ரூபாவில் தற்போது களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவோருக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிலியந்தல பஸ் நிலையத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 26 பேர் பலியானதுடன் மேலும் 64 பேர் காயமடைந்தது தெரிந்ததே.

(ச)

# வயல் விழாவிற்கு எங்களையும் அழைப்பீர்களா?
# வலம்புரியின் ஆசிரியர் தலையங்கத்திற்கு யாழ்.அரச அதிபர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

*02.02.2008 அன்று 'வயல் விழாவிற்கு எங்களையும் அழைப்பீர்களா?' என்ற வலம்புரியின் ஆசிரியர் தலையங்கத்திற்கு யாழ். அரச அதிபர் கே.கணேஷ் அவர்கள் அளித்த விளக்கம் இங்கு அப்படியே தரப்படுகிறது. (ஆ-ரி)*

பிரதம ஆசிரியர்,
வலம்புரி நாளிதழ்.

அன்புடையீர்,

வயல் விழாவிற்கு எங்களையும்
அழைப்பீர்களா?

மேற்படி தலைப்பின் கீழ் தங்கள் 02.02.2008ந் திகதிய பத்திரிகையின், ஆசிரியர் தலையங்கத்தில் -

யாழ்.மாவட்டத்தில் குறிப்பாக -தீவகப் பகுதிகளிலுள்ள மண்டைத்தீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் மண் அணைகள், குளங்கள், வடிகால்கள் ஒழுங்காக புனரமைத்து பராமரிக்கப்படாமையினாலும், அத்துடன் மண்டைதீவு பகுதியில் உவர் நீர் தடுப்பணைகள் ஒழுங்காக பராமரிக்கப்படாமையினாலும், இப்பிரதேசத்தில் நன்னீர் உவர்நீராக மாறுவதால் மக்கள் நெற்செய்கையை கைவிடவேண்டியுள்ளதெனவும், இதனால் நெல் உற்பத்தி குறைந்து, மாவட்டத்தின் ஏனைய பிரதேச மக்கள் கொண்டாடும் வயல் விழாவை இப்பிரதேச மக்கள் வயல் விழா செய்யமுடியாத நிலை ஏற்படுவது குறித்து பகிரங்கக் கடிதம் ஒன்றினை எழுதியிருந்தீர்கள்.

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக பின்வரும் கருத்துக்களை தங்களுக்கு தயவாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

✵ யாழ். மாவட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் இனங்காணப்படும் போது குறிப்பிட்ட பிரதேசத்தின் சனத்தொகை நில அளவு, போரினால் பாதிக்கப்பட்ட தன்மை, பின்தங்கிய பிரதேசம் என்பவற்றை அடிப்படையாக கொண்டே முன்னுரிமைப் படுத்தப்படுகிறது.

இம்முறை தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருவதுடன் 2005ஆம் ஆண்டின் பின் இது மிகவும் இறுக்கமாகவும், அதேவேளை தேவைகள் மக்களுக்கு சென்றடையக்கூடி விதத்தில் மிகவும் நிதானமாகவும் பின்பற்றப்பட்டு வருகின்றது.

✵ நன்னீரானது உவர்நீராக மாறுவது யாழ்.மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலும் பொதுவாகக் காணப்படுகின்ற முக்கிய பிரச்சினையாகும். இது தனி ஒரு கிராமத்துக்குரிய பிரச்சினையல்ல. இப்பிரதேசத்தின் பல வயல் நிலங்கள் உவர் நீராக மாறியதனால் கைவிடப்பட்டுள்ளன.நன்னீர் உவர்நீராக மாறுவதற்கு பல காரணிகள் உள்ளன. அவற்றில் கடல் அரிப்பும் ஒன்றாகும். யாழ் மாவட்டத்தின் நன்னீர் உவர்நீராக மாறுவதை தடுக்க பல திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் நிலத்தடி நீர், மேற்பரப்பு நீர் என்பவற்றை பாதுகாக்கும் வகையில் 2006ஆம் ஆண்டு திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது மாவட்டத்தின் சாதாரண சூழ்நிலை ஏற்படும் போது அமுல்படுத்தக் கூடியதாக இருக்கும். இவ்வாறு இத்திட்டங்கள் நிறைவேற்றப்படும் போது நன்னீர் உவர் நீராக மாறாமல் தடுக்கப்படுவதுடன் மாவட்டத்தின் சகல பிரதேச செயலகங்களிலும் கைவிடப்பட்ட வயல் நிலங்கள் மீண்டும் நெற்செய்கைக்கு உட்படுத்தக்கூடிதாக இருப்பதுடன் இதன் மூலம் நெல் உற்பத்தி அதிகரித்து சகல பிரதேசங்களிலும்- 'வயல் விழா நடைபெறக்கூடிய சூழ்நிலை ஏற்படும்'.

✵ நிக்கொட் IIஆம் கட்ட திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் 10 உவர்நீர் தடுப்பணைகளை புனரமைப்பதற்காக மாகாணசபையினால் 22.02.2008 ந் திகதியன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு புனரமைக்கப்படவேண்டிய உவர் நீர் தடுப்பணைகளில் **'நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பனங்காணி, அத்தான் கரையோடை உவர்நீர் தடுப்பணைகளும், வேலணை பிரதேச செயலர் பிரிவில் தேவானைக் குளம், செலானோடை உவர்நீர் தடுப்பணைகளும், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உப்புக்களி வெள்ளைத்தடல் முதலைக்குளி மற்றும் காளி குளம் உவர்நீர் தடுப்பணைகளும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கல்லுண்டாய் உவர் நீர்த்தடுப்பணையும்'** சங்கானை பிரதேச செயலர் பிரிவில் அராலி உவர்நீர் தடுப்பணையும் புனரமைக்கப்படவுள்ளன. இவ்வேலைத் திட்டம் தொடர்பான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் அனைத்தும் நீர்ப்பாசன திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன என்பதை தங்களிற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ யாழ்.மாவட்டத்தின் குளங்கள், வடிகால்கள் மற்றும் உவர்நீர் தடுப்பணை போன்ற பல்வேறு அபிவிருத்தி திட்டங்களிற்காக பல்வேறு நிதி மூலங்களில் இருந்து குறிப்பாக நியாப், நீர்ப்பாசன திணைக்களம், கமநல அபிவிருத்தி திணைக்களம், உலக உணவுத் திட்டம், கெயர்(CARE), ஜி.ரி.இசற்(GTZ) போன்றவற்றின் நிதியுதவியுடன் 2000 ஆண்டிலிருந்து 2007ஆம் ஆண்டுவரையும் செயலக தரவுகளில் இருந்து இதுவரை **169 குளங்களும், 32 வாய்க்கால்களும், 24 மண் அணைகளும்** புனரமைக்கப்பட்டுள்ளன.

இதில் குறிப்பாக நியாப் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர்-கூடுதலான குளங்களும், அணைகளும் புனரமைக்கப்பட்டுள்ளன.

❖ புனரமைக்கப்பட்ட குளங்கள்-

புனரமைக்கப்பட்ட -169 குளங்களில்18 குளங்கள் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்தும், 19 குளங்கள் வேலணை பிரதேச செயலர் பிரிவிலிருந்தும், 04 குளங்கள் காரைநகர் பிரதேச செயலர் பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு புனரமைக்கப்பட்ட 169 குளங்களில் **'ஏறக்குறைய 25% ஆனது தீவகப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது'**.

❖ புனரமைக்கப்பட்ட வாய்க்கால்கள்-

புனரமைக்கப்பட்ட -32 வாய்க்கால்களில் 05 வாய்க்கால்கள் வேலணை பிரதேச செயலர் பிரிவிலும், ஒரு வாய்க்கால் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவிலும் புனரமைக்கப்பட்டது. இவ்வாறு புனரமைக்கப்பட்ட 32 வாய்க்கால்களில் **'19% ஆனது தீவகப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது'**.

❖ புனரமைக்கப்பட்ட தடுப்பணைகள்-

புனரமைக்கப்பட்ட -24 தடுப்பணைகளில், 01 நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும், 05 ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும், 01 வேலணை பிரதேச செயலர் பிரிவிலும், 02 காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் புனரமைக்கப்பட்டது.

இவ்வாறு புனரமைக்கப்பட்ட மொத்த தடுப்பணைகளில் **'38% ஆனது தீவகப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது'**.

மேற்குறிப்பிட்ட தரவுகளை நோக்கும் போது தங்களினால் பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை, புங்குடுதீவு போன்ற இடங்களில் உள்ள குளங்கள், வாய்க்கால்கள்,உவர்நீர் தடுப்பணைகள் என்பன தெரிவு செய்யப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளன. என்பதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

✵ தங்கள் பத்திரிகையில் மண்கும்பான் இடம் பற்றியும் குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனால் மண்கும்பானில் உவர்நீர் தடுப்பணைகளை மேற்கொள்வதற்காக 2006ஆம் ஆண்டு நியாப் திட்ட நிதியுதவியுடன் ரூபா 8 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது அவ் அணைக்கட்டு வேலைகள் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்டு வருவதுடன் அதில் 40% வேலைகள் நிறைவு பெற்றும் உள்ளன.

✵ தங்கள் ஆசிரியர் தலையங்கத்தில் மண்டைதீவு பிரதேசத்தைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. இம் மண்டைதீவு கிராமத்தில் 1996ஆம் ஆண்டில் 20 குடும்பங்களும், 2002 ஆம் ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு பின்பு 239 குடும்பங்களும், 2003 ஆம் ஆண்டு 374 குடும்பங்களும், தற்போது 245 குடும்பங்களும் வசித்து வருகின்றன. இப் பிரதேச மக்களின் தேவைகள் பற்றி மதிப்பீடு செய்து நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

எனவே மேற்கூறப்பட்ட கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு நோக்கும்போது - யாழ்.மாவட்டத்தில் கிடைக்கும் நிதி மற்றும் பௌதிக வளங்கள் யாவும் பிரதேச வேறுபாடின்றி -தேவைகளின் அடிப்படையில் **'சமமாக பங்கிடப்பட்டு வருகின்றது'** என்றும் தொடர்ந்து இதேமுறையே பின்பற்றப்பட்டு வரும் எனவும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்வதுடன்-தங்களின் பத்திரிகையில் வெளிவந்த கருத்து முரண்பாடாக உள்ளதா? எனவும் எண்ணத் தோன்றுகின்றது.

எனவே இவ்வாறான கருத்துக்களை வெளியிடும்போது உறுதிப்படுத்தி வெளியிடுவது சிறந்ததாக இருக்கும் என்பதை தங்களுக்குத் தயவுடன் தெரிவித்துக் கொள்வதுடன் தங்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களுக்கு -**'எப்பொழுதும் முன்னுரிமை அளிக்கப்படும்'**. என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தங்கள் சேவையிலுள்ள,

[signature]

க. கணேஷ்

அரசாங்க அதிபர் / மாவட்ட செயலர்

யாழ் மாவட்டம்

# இன்று ஒரு தகவல்

## பெண்ணின் பெருமை

"அறிவில் சிறந்தவர்கள் ஆண்களா? பெண் களா?" என நண்பர் ஒருவரைப் பார்த்துக்கேட்டேன். அவர் மெதுவாகத் தலையைச் சொறிந்துகொண்டே "அதிலே என்ன சார் சந்தேகம்? அவர்கள்தான்" என்றார். அனு பவ ரீதியில் அவர் அப்படிச் சொன்னாலும் அறி வியல் அடிப்படையில் பார்ப்பவர்களும் இப்படித்தான் சொல் கிறார்கள்.

இயற்கையே பெண்களுக்குப் பல சலுகைகளைக் கொடுத்து இருக்கிறது. சக்தியைக் கொடுத்திருக்கிறது. வெளிநாடுகளிலே இதைப்பற்றி நிறைய ஆராய்ச்சி செய்து புள்ளி விபரங்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

ஆண் குழந்தைகளை விடப் பெண்குழந்தைகள் முன் னதாகவே பேச ஆரம்பித்து விடுகிறார்களாம். சம வய துள்ள ஆண்குழந்தைகள் பெண்குழந்தைகள் இரு பாலாரையும் வைத்துச் சோதனைகள் சில செய்து பார்த் திருக்கிறார்கள்.

ஒரே கேள்வியைப் பலவிதமாகக் கேட்பது; ஒரே செய் தியை வேறு வேறு கோணங்களில் இருந்து விளக்கு வது; தவறு இல்லாமல் பேசுவது; வேகமாகப் படிப்பது; எழுதுவது; புரிந்துகொள்வது இப்படி எத்தனையோ சோதனைகள்.

இவற்றில் எல்லாம் ஆண் குழந் தைகளைவிடப் பெண் குழந்தைகள் ஒன்றரை மடங்கு அதிக திறமையுள்ளவர் களாக இருக்கிறார்கள். இன்னொரு மொழியைக் கற் றுக் கொள்வது; பேசுவது, இரு மொழிகளை மாற்றி மாற் றிப் பேசுவது, மொழி பெயர்ப்பது என்பவற்றிலும் பெண் களுக்குத் தான் திறமை அதிகம்.

புள்ளிவைத்துக் கோலம் போடுவது முதல் கைக்கடி காரங்களிலேயும் கம்பியூட்டர்களிலேயும் நுண்ணிய பாகங்களைப் பொருத்துவது வரை பெண்கள் திறமை யாகச் செயற்படுகிறார்கள். நுட்பம், துல்லியம், விரைவு, சிறு கை இலக்கங்களோடு செய்ய வேண்டிய மென்மையான பணிகள் இவற்றுக்கெல்லாம் தேவை கவனக் குவியல்... பொறுமை! இவை பெண்களிடம் தான் இருக்கின்றன.

பெண்களின் மூக்கு... மோப்ப உணர்வுபற்றியும் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். பெண்கள் அதிக எண் ணிக்கையிலே வாசனைகளைப் பிரித்துக் கண்டு பிடித்து விடுகிறார்களாம். செவிப்புலன் உணர்வும் பெண்களுக் குத்தான் அதிகமாம்! ஒரு பொருளைப் பார்த்தவுடனேயே அது என்ன என்று அடையாளம் கண்டுகொள் வது; அதை மனதில் பதியவைத்துக்கொள்வது; இன்னொரு சந்தர்ப் பத்திலே அது எங்கே இருந்தது என்று சரியாக ஞாபகப் படுத்தி கொள்வது... இந்த மாதிரிச் சோதனைகளில் எல்லாம் பெண்கள்தான் முன்னணியில் இருக்கிறார் கள்.

ஒரு சராசரிச் சூழ்நிலையில் ஆண்களைவிட அதிக மான எண்ணிக்கையிலே புன்னகை புரிவது, சிரிப்பது, அதிக மான தோழமை உணர்வோடு பேசுவது பெண்களே!

மருத்துவர்களை எடுத்துக்கொண்டால் சிரித்த முகத் தோடு நோயாளர்களிடம் பரிவோடு பேசுவதில் பெண் டாக் டர்கள் தான் அதிகம். இவை எல்லாமே அறிவியல் பூர்வ மான செய்திகள். ஆராய்ச்சியாளர்கள் கூறியிருக்கிற உண்மைகள்.

எனவே, இளம் பெண்கள் வாழ்விலே சோர்வடையத் தேவையில்லை. இயற்கையே நமக்குச் சாதகமாக இருக் கிறது. எல்லாம் முடியும் நம்மால்! என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். பள்ளிக்கூடங்களிலும் சரி, வீடுகளிலும் சரி நாம் சாதாரணமாகப் பார்த்துக்கொண்டுதான் இருக்கி றோம்-பெண் பிள்ளைகள் புரிந்து கொள்கிற அளவுக்கு ஆண்பிள்ளைகள் எதையும் புத்திசாலித்தனமாகப் புரிந்து கொள்வதில்லை.

ஒரு பையன்-தனது அப்பா-அம்மா திருமண ஆல்பத் தைப் புரட்டிக்கொண்டிருந்தான். பின் தன் தாயிடம் கேட் டான்- அம்மா! இது யார்? இந்தப் படத்திலே அழகாக மீசை வைத்துக்கொண்டு, சிரித்துக்கொண்டு நிற்பது?

"அதுதான் உன் அப்பா" என்றார் தாயார். அப்படி யென் றால் இப்பொழுது நம்ம வீட்டிலே நரைச்ச தலையோடு அழுதுவழிஞ்சு கொண்டிருக்கிறாரே ஒருவர்-அவர் யார்? என்று கேட்டான் பையன்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# மன்னார் கட்டுப்பாடற்ற பகுதியில் சிறுவர்கள் போஷணை குறைபாட்டுக்கு ஆளாகும் நிலை அதிகரிப்பு - யுனிசெப் தகவல்

(கொழும்பு)

உணவுப்பொருட்கள், போஷணை செறிவூட்டப்பட்ட பதார்த்தங்களின் விநியோகத்தில் ஏற்படும் தாமதங் கள் காரணமாக மன்னார் கட்டுப் பாடற்ற பிரதேசத்தில் உள்ள சிறு வர்கள் போஷணைக் குறைபாட் டுக்கு ஆளாகி வரும் நிலை மோச மாக அதிகரித்துள்ளதாக ஐ.நா. வின் சிறுவர் பாதுகாப்பு அமைப் பான யுனிசெப் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஒரு போதும் இல் லாதவாறு உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்து வருவதால் இடம்பெயர்ந்த நிலையில் வாழும் மக்கள் உள்ளிட்ட போரினால் பாதிக் கப்பட்ட ஒரு மில்லியன் மக்களுக்கு வழங்கப்படும் உணவு நிவாரணங் கள் நிறுத்தப்பட வேண்டிய அபாய மான சூழல் தோன்றியுள்ளதாக ஐ.நா.வின் உலக உணவுத்திட்டம் எச்சரித்துள்ளது.

வடக்கு-கிழக்கின் நிலைமைகள் தொடர்பாக ஐ.நா.முகவர் நிறுவனங் களின் நிலையியற்குழு வெளியிட் டுள்ள அறிக்கையில் இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதா வது,

### மோதலால் மக்கள் இடப்பெயர்வு

மன்னாரில் இடம்பெற்று வரும் மோதல்கள் காரணமாக, கட்டுப் பாடற்ற பகுதியில் 6ஆயிரத்து 820 குடும்பங்களைச் சேர்ந்த 25 ஆயி ரத்து 535 பேர் இடம்பெயர்ந்துள் ளனர். இவர்கள் மாந்தை மேற்கு பிர தேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த வெள்ளாங்குளப் பகுதியிலுள்ள கள்ளிமோட்டை, தேவன் பிட்டி உள் ளிட்ட கிராமங்களில் தங்கியுள்ளனர்.

இந்த பிரதேசத்தைச் சேர்ந்த மக்களின் இதேயளவு எண்ணிக் கையானோர் ஏற்கனவே அருகிலுள்ள வேறு மாவட்டங்களுக்கும் மன்னா ரின் அரசாங்க கட்டுப்பாடற்ற பகு திக்கும் இடம்பெயர்ந் துள்ளனர்.

### உணவுப் பொருட்கள் கொண்டு செல்வதில் கட்டுப்பாடு

இந்த நிலையில் மன்னார் கட் டுப்பாடற்ற பகுதிக்கு உணவுப் பொருட் களைக் கொண்டு செல்வதில் பல் வேறு கட்டுப்பாடுகள் காணப்படு கின்றன. அத்தோடு உயிலங்குளம் பாதை மூடப்பட்டதால் இப்பொருட் களை ஓமந்தை பாதையினூடாக மேலதிகமாக அதிக தூரம் பயணம் செய்து கொண்டுசெல்ல வேண்டிய சூழ்நிலை தோன்றியுள்ளது.

இதனால் இப்பிரதேசத்துக்கான உணவு விநியோகத்தில் தாமதம் ஏற் படுகின்றது. பிரதேசத்தில் இடம் பெயர்ந்துள்ள மக்கள் தமது வீடு வாசல்கள், தொழில்துறைகள் உள் ளிட்ட அனைத்தையும் இழந்த நிலை யிலேயே முகாம்களில் தங்கியுள்ளனர்.

இதனால் இம் மக்கள் வரு மானத்தை ஈட்டிக்கொள்ளும் சந் தர்ப்பம் மிக அரிதாகவே உள்ளது. எனவே, இவர்கள் உலக உணவுத் திட்டம் மற்றும் அத்தியாவசிய ஆணை யாளர் நாயகத்தின் திணைக்களத் தின் ஊடாக வழங்கப்படும் உணவு நிவாரணங்களிலேயே முழுமை யாக தங்கியுள்ளனர்.

இந் நிலையில் உணவுப் பொருள் விநியோகத்தில் ஏற்படும் தாமதத் தால் இடம்பெயர்ந்த மக்கள் குறிப் பாக சிறுவர்கள் மோசமாக பாதிக் கப்படுகின்றனர். இதனால் சிறுவர் கள் போஷணைக் குறைபாட்டுக்கு ஆளாகும் நிலை மோசமாக அதி கரித் துச் செல்கின்றது. இது பாரதூர மான நிலையாகும். (அ-5)

# பருத்தித்துறையில் ரூபா 80 மில்லியன் செலவில் புதிய சந்தைக் கட்டடம் - யாழ் அரச அதிபர்

பருத்தித்துறை நகரை பார்க்கும் போது மிகுந்த கவலையாக இருக் கிறது. நகரத்தில் சிறந்த சந்தை ஒன் றில்லை. இதனை உருவாக்கி நகரை ஒருவர்த்தக மையமாக்க வேண்டும்.

இவ்வாறு பருத்தித்துறை ப.நோ. கூ.சங்கத்தின் கோப் சிற்றியை திறந்துவைத்து பேசிய யாழ். அர சாங்க அதிபர் கே.கணேஷ் தெரிவித் தார். இக் கோப்சிற்றி திறப்புவிழா சங்கத் தலைவர் சிவஸ்ரீ பாலபத்ம நாதக்குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

பருத்தித்துறை நகரில் 80 மில் லியன் ரூபா செலவில் நவீன சந்தை ஒன்று அமைக்கப்படவுள் ளது. இதற்கான நிதியை வடக்கு- கிழக்கு மாகாண கரையோர சமு தாய அபிவிருத்தி நிறுவனம் (நெக் டெப்) தமது செலவில் அமைக்க முன்வந்துள்ளது.

இதற்கான கட்டுமானப்பணி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இச்சந்தை அமைப்பதன் மூலம் பருத்தித்துறை நகரம் ஒரு சிறந்த வர்த்தக மையமாக உருவாகும். இச் சந்தைக்கட்டடம் அடுத்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் முடிவடையும் என எதிர்பார்க்கிறோம். அதன் பின் மக்கள் சேவைக்கு விடப்படும்.

கடந்தவருடம் 2006ஆம் ஆண்டு ஏ-9 கண்டி வீதி மூடப்பட்டதை யடுத்து 2007ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் மக்களுக்கான அத்தி யாவசிய பொருட்கள் விநியோ கத்தை ப.நோ.கூ.சங்கங்கள் மேற் கொண்டிருந்தன.

எங்கு கஷ்டங்கள் நிலவுகிறதோ அங்கெல்லாம் ப.நோ.கூ.சங்கங் களே உணவு விநியோகத்தை மேற் கொண்டு வருகின்றன. சங்கங்கள் ஊடாக ஒழுங்காக சேவை செய்யும் ஊழியர்கள் ஆத்ம திருப்தியடைகி றார்கள். இவ்வாறான சேவைகளை கூட்டுறவு ஊழியர்கள் தொடர வேண் டும். தனிப்பட்ட வர்த்தகர்களுடன் போட்டி போட்டு எமது மக்களுக்கு சேவை செய்ய வேண்டும்.

வடக்கு கிழக்கிலுள்ள ப.நோ.கூ. சங்கங்களுக்கு நிவாரண பொருட்கள் விநியோகம் இல்லாவிட் டால் அவை இயங்க முடியாது. இந் நிலையில் 2006ஆம் ஆண்டு ஏ-9 கண்டி வீதி மூடப்பட்ட பின்னர் குடா நாட்டு ப.நோ.கூ.சங்கங்களில் 4 ஆயி ரத்து 906 மில்லியன் பெறுமதி யான பொருட்கள் யாழ்.செயலகத் தினால் வழங்கப்பட்டன. இதனால் கஷ்ட நிலையிலுள்ள ப.நோ.கூ.சங் கங்களுக்கு இலாபம் கிடைக்கக் கூடியதாக இருந்தது என்றார்.

இந்நிகழ்வில் யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ. சிவலிங்கம், பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் மு.சிவ நேசன் மற்றும் பலர் உரையாற் றினர். (அ-35)

# இராசிபலன்

29.04.2008

(சித்திரை 17, செவ்வாய்க்கிழமை)

திருவோணம் முற்பகல் 08.08 மணிவரை

நவமி பின்னிரவு 03.44 மணிவரை

இராகுகாலம் 02.58-04.28 மணிவரை

சுபநேரம் 10.28-11.58மணிவரை

| | |
|---|---|
| மேடம் | உறவினர் சந்திப்பு, போசனசுகம், மேன்மை. |
| இடபம் | பிதாசிந்தை, சரீரப்பிரயாசை, காரியதாமதம், பித்தரோகம். |
| மிதுனம் | அபகீர்த்தி, ஆரோக்கியக் குறைவு, முயற்சி தாமதம், வாகனபயம். |
| கடகம | எடுத்த கருமங்கள் கைகூடும், செல்வாக்கு, பொருள் சேர்க்கை. |
| சிங்கம் | நல்ல காரியம், அதிகாரம், தேக நலன், பகைவரால் நன்மை. |
| கன்னி | வியாபாரவிருத்தி, புத்திரரால் கவலை, எடுத்த காரியம் தாமதமாகும். |
| துலாம் | புதிய உறவு, வீண்பயம், சுப நிகழ்வு, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | சகோதரர் உதவி, முயற்சி கைகூடும், போசனசுகம். |
| தனுசு | கோபப்படல், முயற்சி தாமதம், சுபசெலவு, ஆரோக்கியக்குறைவு. |
| மகரம் | தெளிந்தசிந்தை, நல்ல முயற்சி, பெரியோர் உதவி, விருந்துபசாரம். |
| கும்பம் | பிரயாணபயம், நிலைமாற்றம், வேலைச்சுமை, முயற்சி தாமதம். |
| மீனம் | பெரியோர் உதவி, தடைப்பட்ட காரியம் கைகூடும், அதிகாரம். |

வளவன்



நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலையில் (நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்) மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ் வில் நல்லை ஆதீன முதல்வர் சிரேஷ்ட மாணவ முதல்வன் ஜெ.சிறிக்குமரனுக்கு சின்னம் சூட்டுவதைப் படத்தில் காண லாம்.

## பாதீனியச் செடிகளை அகற்ற நடவடிக்கை எடுப்பார்களா ?

(யாழ்ப்பாணம்)

புத்தூர், சுன்னாகம் வீதியில் நிலாவரைச் சந்தி தொடக்கம் நவக்கிரி சந்தி வரை பாதீனியச் செடிகள் வீதி ஓரங்களிலும் அண்டிய பகுதிகளில் உள்ள தோட்டங்கள் சிலவற்றிலும் வளர்ந்து நிற்பதையும் காணக்கூடியதாகவுள்ளது.

இப் பாதீனியச் செடிகள் சுகாதாரத்துக்கு தீங்கு விளைவிக்கக் கூடியதாக உள்ளதால் இச் செடிகளை அகற்ற சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? (ஓ-134)




## சுகவாழ்வு பொதுவிரிவுரைத்தொடர் -6

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் 'சுகவாழ்வு' எனும் தலைப்பிலான பொது விரிவுரைத்தொடர் 06 எதிர்வரும் 3ஆம்திகதி சனிக்கிழமை மு.ப. 9.30மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை பொது மருத்துவநிபுணர் வைத்திய கலாநிதி ரி.பேரானந்தராஜா தலைமையில் இடம்பெறவுள்ள இவ் விரிவுரையினை யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை குழந்தை மருத்துவ வைத்தியநிபுணர் வைத்திய கலாநிதி க.அருள்மொழி "குழந்தை நோய்களும் சிகிச்சை முறைகளும்" எனும் தலைப்பில் விரிவுரையாற்றவுள்ளார்.

ஆர்வமுள்ள பொது மக்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் வருகை தந்து பயன்பெற முடியும் என புறநிலைப் படிப் புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (ஓ)

## இடமாற்றம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபை முகாமைத்துவ உதவியாளர்களான எஸ்.சிவஞானம், கே.குமாரசாமி ஆகியோர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கும், பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை முகாமைத்துவ உதவியாளர் திருமதி விஜிதா தவலிங்கம், பிரதம முகாமைத்துவ உதவியாளர் எஸ். பூபாலசிங்கம் ஆகியோர் பருத்தித்துறை பிரதேச சபைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (அ-52)

## விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, பட்டப்பின் படிப்புகள் பீட கல்வியாண்டு 2007/2008க்கான முதுகலைமாணி கற்கைநெறிக ளான பிராந்தியத் திட்டமிடல், அபிவிருத்திக் கற்கைகள், சனத்தொகை அபிவிருத்திக் கற்கைகள் மற்றும் கல்வியியலில் முதுமாணி கற்கைகளுக்கான விரிவுரைகள் யாவும் மே மாதம் 24ஆம்திகதி (சனிக்கிழமை) ஆரம்ப மாகும் என பீடாதிபதி க.கந்தசாமி தெரிவித்துள்ளார். (ஓ)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு ஐ.சி.ஆர்.சி. உதவி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்தவர்களுக்கும் மீளத் திரும்பியவர்களுக்கும் உதவிகள் வழங்கப்பட்டன.

அவயவங்களை இழந்த 46 பேர் உள்ளடங்கலாக 60க்கு மேற்பட்ட நோயாளர்களுக்கான செயற்கை உறுப்புக்களையும், நடமாட உதவும் கருவிகளையும், ஐ.சி.ஆர்.சி. மார்ச் மாதத்தில் வழங்கியுள்ளது.

மேலும் இடம்பெயர்ந்த 370 குடும்பங்களுக்கு சுகாதாரப் பொதிகள், விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரியிலுள்ள இடம்பெயர்ந்த மக்கள் தங்கி வாழும் குடும்பங்களுக்கு 200 மெற்றிக்தொன் தானியம் சேமிப்பதற்கான களஞ்சிய வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

15 குழந்தைகள் உள்ளிட்ட 780 இடம்பெயர்ந்த மக்களுக்கு சுகாதாரப் பொருட்கள் வழங்கப்பட்டன எனவும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை தெரிவித்துள்ளது. (அ-7)

## மணற்காடு குடத்தனை அகதிமுகாமுக்கு — ஈ.பி.டி.பி. பிரதிநிதிகள் விஜயம் —

(யாழ்ப்பாணம்)

மணற்காடு குடத்தனை அகதிமுகாமுக்கு விஜயம் செய்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி பிரதிநிதிகள், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆகியோர் அகதிமுகாம் பொதுமக்களை சந்தித்துள்ளனர்.

பொதுமக்கள் பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து பிரதிநிதிகளிடம் கலந்துரையாடியுள்ளதாக யாழ். ஈ.பி.டி.பியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

இது சம்பந்தமாக மக்களுடைய சகல பிரச்சினைகளையும் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்குக் கொண்டு செல்வதாக தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்த பொதுமகன், ஏற்கனவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் எமக்கு இலவச நிவாரணம் மற்றும் மலசலகூட வசதிகள் சுனாமியால் இறந்தவர்களை சென்று அஞ்சலி செலுத்துவதற்கு ஒழுங்குசெய்து தந்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் வரதீஸ்வரன், பொறுப்பாளர் பெ.சிவப்பிரகாசம் (பிரகாஸ்), பருத்தித்துறை கரவெட்டி பொறுப்பாளர் வ.நடராசா (தில்லை) ஏனைய ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் பிரசாந் உட்பட ஏனையோர் கலந்துகொண்டனர்.

அதனைத் தொடர்ந்து கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவில் 2007 ஆம் ஆண்டுக்கான கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் செல்வாபுரம் சனசமூக நிலையப் பொதுமண்டபம், குழந்தை யேசு இல்லம் புனரமைக்கப்பட்டதையும் கட்சி பிரதிநிதிகளும் பிரதேச செயலர் வரதீஸ்வரனும் பார்வையிட்டனர் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ)

## கல்வி அபிவிருத்தி கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கோட்ட அதிபர்களுக்கான கல்வி அபிவிருத்திக் கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும்.

தவறாது சமுகமளிக்குமாறு அதிபர்களை யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஓ)

## அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தின் ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தின் ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும், எதிர்வரும் 4ஆம்திகதி காலை 8மணி முதல் துன்னாலை அல்லையம்பதி, வடிவேலர் மணிமண்டபத்தில், சங்கத் தலைவர் சொல்வேந்தர் பொன்.சுகந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ், விஷேச அதிதியாக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலர் சி.சத்தியசீலன், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக செங்கைஆழியான் க.குணராசா, யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் த.கலாமணி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நாடகக் கலைஞர் அமரர் கந்தையா வடிவேலு ஞாபகார்த்த சிறுகதைப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பணப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

விழாவில் அத்துடன் நலிவுற்ற மாணவர்கள் கல்வி வளர்ச்சிக்காக, கனடா -ஒட்டாவா பல்கலைக்கழக மாணவர்களினால் வழங்கப்பட்ட ரூபா 50 ஆயிரம், ஓய்வு பெற்ற பாராளுமன்ற ஹன்சாட் அறிக்கையாளர் பொன். இராஜதுரையால் இனங்காணப்பட்ட மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

பொன்.சுகந்தனின் சமூக அரங்கம் மற்றும் இலக்கியச் சிறப்புரைகளும் இடம் பெறும். (ஓ)

## திருநாவுக்கரசு நாயனார் குருபூஜை

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் திருநாவுக்கரசு நாயனார் குருபூஜை நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் பஞ்சபுராணம் ஓதுதல், திருநாவுக்கரசு நாயனார் தேவாரம், பேச்சு ஆகியன இடம்பெறவுள்ளன. (அ-6)

✠✠✠

வண்ணை, சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தால் நாளை புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு திருநாவுக்கரசு நாயனார் குருபூஜை கொண்டாடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் வண்.நாவலர் மகா வித்தியாலய மாணவர்களினதும், அகில இலங்கை திருமறை மன்றத்தினரதும் கூட்டுப் பிரார்த்தனை இடம்பெறும். (அ-7)

✠✠✠

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தீவக பிரதேசத்திற்கான திருநாவுக்கரசு நாயனார் குருபூஜை விழா புங்குடுதீவு திருநாவுக்கரசு அறநெறிப் பாடசாலையில் நாளை புதன்கிழமை 10மணிக்கு இந்து சமய கலாசார திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் எஸ்.உதயபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக புங்குடுதீவு சுப்பிரமணியம் வித்தியாசாலை அதிபர் என்.பஞ்சலிங்கம் கலந்துகொள்வார்.

இந்நிகழ்வில் ஆசியுரையை புங்குடுதீவு சிவன்தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள் வழங்குவார். "குறிக்கோள் இல்லாது கெட்டேன்" எனும் தலைப்பில் உளவளத்துணையாளர் ந.நவராஜ் சிறப்புச்சொற்பொழிவாற்றுவார். தொடர்ந்து புங்குடுதீவு திருநாவுக்கரசு அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. புங்குடுதீவு சிவன் ஆலயத்திலிருந்து திருநாவுக்கரசர் திருவுருவப் படம் திருமுறை பாராயணத்தோடு திருவுலாவாக எடுத்து வரப்படும் நிகழ்வும் இடம்பெறும். (அ-6)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் சுழிபுரத்திலுள்ள சிவபூமி முதியோர் இல்லத்தில் நாளை புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு திருநாவுக்கரச நாயனார் குருபூசை நடைபெறும்.

செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனின் சொற்பொழிவும் சுழிபுரம் விக்றோரியாக் கல்லூரி மாணவர்களின் நடனம், வில்லிசை, இன்னிசைக் கச்சேரி என்பனவும் இடம்பெறும். (அ)


## பரீட்சை நிலைய மாற்றம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 3, 4ஆம் திகதிகளில் மானிப்பாய் சென் ஆன்ஸ் றோ.க.த.பாடசாலையில் நடைபெறவிருந்த முஸ்லிம் மற்றும் கத்தோலிக்க பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்கான பரீட்சை நிலையம் தவிர்க்க முடியாத காரணத்தினால் அப் பாடசாலைக்கு முன்பாக அமைந்துள்ள மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

சென் ஆன்ஸ் றோ.க.த.பாடசாலையில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகள் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)



ஏகத்துவ யாழ்.தலைமையகத்தால யாழ்.போதனாவைத்தியசாலை தாதிமார் பயிற்சிப் பாடசாலையில் அண்மையில் நடத்தப்பட்ட ஸ்ரீ அம்மா பகவான் பாதபூஜை, கலசபூஜை நிகழ்வில் ஏகத்துவ யாழ்.தலைமை நிலையப் பொறுப்பாளர் சந்திரகுமார் பூஜை நடாத்துவதை முதலாவது படத்திலும், நிகழ்வில் கலந்து கொண்ட போதனா வைத்தியசாலை கணக்காளர் இராசநாயகம் மற்றும் பயிற்சி தாதியர் தியானத்தில் இருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# விஸ்வரூபமெடுத்த கில்கிறிஸ்ட் அதிரடிச் சதம்; டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கு முதல் வெற்றி

(மும்பை)

கண் இமைக்கும் நேரத்தில் கில்கிறிஸ்ட் அதிவேக சதமடித்து சாதிக்க, லக்ஸ்மன் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணி 10 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

பந்துவீச்சில் சொதப்பிய மும்மை இந்தியன்ஸ் அணி தனது 4-வது தோல்வியை சந்தித்தது.

இந்தியன் பிரிமியர் லீக்கின் இருபது -20 தொடர் நடைபெற்று வருகிறது. இதில் மும்மையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற லீக் சுற்றின் 14-வது போட்டியில் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் லக்ஸ்மன் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின.

காயம் காரணமாக இப்போட்டியிலும் டெண்டுல்கர் விளையாடவில்லை. சிறிசாந்தை தாக்கிய விவகாரத்தினால் பதிலணித் தலைவர் ஹர்பஜன் சிங் அணியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்ட நிலையில் மும்மை இந்தியன்ஸ் அணிக்கு பொலக் தலைமை தாங்கினார்.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டெக்கான் சார்ஜர்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் இருபது ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களை எடுத்தது.

இதில் நாயர், பிராவோ ஆகியோர் தலா 34 ஓட்டங்களையும் அணித் தலைவர் பொலக் 31 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஆர்.பி.சிங், பங்கர் மற்றும் சயிட் அப்ரிடி ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 155 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி, கில்கிறிஸ்டின் அதிரடிச் சதத்தின் மூலம் 12.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 155 ஓட்டங்களை எடுத்து 10 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

இதல் ஆட்டமிழக்காமல் அடம் கில்கிறிஸ்ட் 48 பந்துகளில் (9 பவுண்டரிகள், 10 சிக்ஸர்கள் உட்பட) 109 ஓட்டங்களையும் வி.வி.எஸ். லக்ஸ்மன் 29 பந்துகளில் (5 பவுண்டரி உட்பட)36 ஓட்டங்களையும் எடுத்தனர்.



ஆட்டநாயகனாக அடம் கில்கிறிஸ்ட் தெரிவானார்.

**கில்கிறிஸ்ட் புதிய சாதனை**

டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் அடம் கில்கிறிஸ்ட் வழக்கம் போல் அதிரடியாக ஆடி 42 பந்துகளில் 100 ஓட்டங்களை எடுத்தார்.

இதன் மூலம் ஐ.பி.எல் தொடரில் அதிவேக சதம் அடித்து புதிய சாதனை படைத்தார்.

முன்னதாக இதே டெக்கான் அணியைச் சேர்ந்த மற்றொரு ஆஸி. வீரரான அன்ரூ சைமண்ட்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு எதிராக 47 பந்துகளில் 100 ஓட்டங்களை எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ் வெற்றியின் மூலம் விளையாடிய 4 போட்டிகளில் தனது முதலாவது வெற்றியை பதிவு செய்தது லக்ஸ்மன் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணி. (5)

# ரபேல் நடால் பட்டம் வென்றார்

(மான்டிகார்லோ)

மான்டிகார்லோ மாஸ்டர்ஸ் பட்டத்தை உலகின் இரண்டாம் நிலை வீரரான ரபேல் நடால் வென்றுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பரபரப்பான இறுதிப்போட்டியில் உலகின் முதல்நிலை வீரரான ரோஜர் பெடரருடன் மோதிய நடால் 7:5, 7:5 என்ற நேர்செட்களில் வெற்றி பெற்றார். 3 முறை பிரெஞ்ச் ஓபன் பட்டத்தை வென்றுள்ள நடால், நேற்று முன்தினம் போட்டியின்போது முதல் செட்டில் 0:4 என்ற கணக்கில் பின்தங்கியிருந்தார்.

எனினும் சிறப்பாக சேர்வீஸ்களை அடித்து ரோஜர் பெடரருடன் 3ஆவது தொடர் வெற்றியை பெற்றார். இதுவரை 15 முறை பெடரருடன் மோதி யுள்ள நடால், 9 முறை வெற்றி பெற் றுள்ளார்.

களிமண் ஆடுகளத்தில் 8 முறை நடைபெற்ற போட்டிகளில் இது நடாலுக்கு 7 ஆவது வெற்றியாகும். (5)

# பதினொரு ஐ.பி.எல் போட்டிகளில் விளையாட ஹர்பஜனுக்குத் தடை

(மும்பை)

ஐ.பி.எல் இருபது -20 தொடரில் ஹர்பஜன் சிங், 11 போட்டிகளில் விளையாட இந்திய கிரிக்கெட் சபை நேற்று தடை விதித்துள்ளது.

மொகாலியில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த போட்டியின் முடிபில் எதிரணி வீரர் சிறிசாந்தை தாக்கினார் மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் ஹர்பஜன் சிங். இதனால் மைதானத்திலேயே சிறிசாந் அழுதார்.

அதைக் கண்ட வீரர்களும் ரசிகர்களும் அதிர்ச்சி அடைந்தனர். இதனை அறிந்த ஐ.பி.எல் போட்டி நிர்வாகம் அதற்கான ஒளிப் பதிவு நாடாவை ஆய்வு செய்து ஹர்பஜன் சிங்கை போட்டியிலிருந்து தற்காலிகமாக நீக்கியது.

இதனால் டெக்கான் சார்ஜர்ஸுக்கு எதிராக மும்மையில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் போட்டியில், தென்னாபிரிக்க சகல துறை ஆட்டக்காரர் ஷேன் பொலக் மும்மை அணிக்கு தலைவராக பணியாற்றினார்.


இந்த நிலையில் சிறிசாந்தை தாக்கியது தொடர்பாக தனது விளக்கத்தை ஒழுங்கு விசாரணைக் குழுவிடம் ஹர்பஜன் சிங் நேற்று அளித்தார்.

ஐ.பி.எல் நிர்வாகக் குழு, ஹர்பஜனுக்கு 11 ஐ.பி.எல் போட்டிகளில் விளையாட தடை விதித்துள்ளது.

இதற்கிடையில் பி.சி.சி.ஐக்கு ஹர்பஜன் எழுதியுள்ள கடிதத்தில் தான் சிறிசாந்தை கன்னத்தில் அறைந்தது தவறு என்பதை ஒப்புக்கொண்டதோடு மன்னிப்பும் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த பி.சி.சி.ஐ நிர்வாக அதிகாரி ரத்னாகர் சேட்டி, ஹர்பஜன் செய்த செயலுக்கு தக்க தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும் பி.சி.சி.ஐ தனியாக விசாரித்து தண்டனை அளிக்க வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்தார். (5)



# ஐ.பி.எல் இருபது-20 தொடரில் மும்பை அணி 4 போட்டியிலும் தோல்வி; முன்னணியில் சென்னை சுப்பர் கிங்ஸ்

(சென்னை)

ஐ.பி.எல் இருபது -20 கிரிக்கெட் போட்டியில் நேற்று முன்தினத்துடன் 14 ஆட்டம் முடிபடைந்து விட்டது.

இதில் டெண்டுல்கர் தலைமையிலான மும்மை இந்தியன்ஸ் அணியின் நிலை மிகவும் பரிதாபகரமாக உள்ளது. தான்மோதிய 4 ஆட்டத்திலும் தோல்வியடைந்துள்ளது.

ஆரம்ப ஆட்டத்தில் பெங்களூர் அணியிடம் தோற்றது. அதைத் தொடர்ந்து சென்னை, பஞ்சாப் அணிகளிடமும் நேற்று முன்தினம் டெக்கான் சார்ஜர்ஸ் (ஐதராபாத்) அணியிடமும் தோல்வி அடைந்தது.

மும்பை அணியின் தலைவர் டெண்டுல்கர் காயம் காரணமாக 4 போட்டியிலும் ஆடவில்லை. இது அணிக்கு பலவீனத்தை ஏற்படுத்தியுள்ளது.

முதல் மூன்று ஆட்டத்தில் ஹர்பஜன் தலைவராக பணியாற்றினார்.

சிறிசாந்தை அடித்ததால் தற்காலிகமாக அவர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். இதனால் நேற்று முன்தின ஆட்டத்திற்கு பொலக் தலைவராக பணியாற்றினார்.

ஜெயசூரியா, உத்தப்பா போன்ற அதிரடித் துடுப்பாட்ட வீரர்களும் பொலக், பிராவோ போன்ற சிறந்த சகல துறை வீரர்கள் இருந்தும் மும்மை அணி இன்னும் ஒரு ஆட்டத்தில் கூட வெற்றி பெற முடியாமல் போனது ஆச்சரியமே.

இத்தொடரில் தற்போது சென்னை சுப்பர் கிங்ஸ் அணிதான் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. தான் மோதிய மூன்று ஆட்டத்திலும் வெற்றியைப் பெற்று 6 புள்ளியுடன் உள்ளது.

அணித்தலைவர் தோனி, ஹைடன், ஜேக்கப் ஓரம், சுரேஷ் ரெய்னா, முரளிதரன் ஆகியோர் அந்த அணியின் முதுகெலும்பாக உள்ளனர்.

அதற்கு அடுத்தபடியாக வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியுள்ளது.

அந்த அணி 4 ஆட்டத்தில் 3 இல் வெற்றியைப் பெற்றுள்ளது. டில்லி அணியிடம் தோற்றிருந்தது அந்த அணி 6 புள்ளியுடன் இருக்கிறது.

சிமித், வொட்சன், கைப் போன்ற வீரர்கள் அந்த அணியில் உள்ளனர். சேவாக்கின் டில்லி அணியும் கங்குலியின் கொல்கத்தா அணியும் 3 ஆட்டத்தில் 2 வெற்றி, ஒரு தோல்வியுடன் தலா 4புள்ளிகள் பெற்றுள்ளன.

யுவராஜின் பஞ்சாப் அணி 4 ஆட்டத்தில் 2 வெற்றி, 2தோல்வியுடன் 4 புள்ளி பெற்றுள்ளது. சைமன்ஸ், கில்கிறிஸ்ட், அப்ரிடி போன்ற அதிரடி துடுப்பாட்ட வீரர்களைக் கொண்ட ஐதராபாத் டெக்கான் சார்ஜர்ஸ் அணி 4 ஆட்டத்தில் ஒரே ஒரு வெற்றியை மட்டும் பெற்று 2 புள்ளியுடன் இருக்கிறது.

பெங்களூர் அணி 3 ஆட்டத்தில் ஒரு வெற்றி, 2தோல்வியுடன் 2 புள்ளி பெற்றுள்ளது. மும்மை அணி புள்ளி எதுவும் பெறவில்லை. (5)

# கிங்ஸ் லெவின் பஞ்சாப் வெற்றி; சேவாக் அணிக்கு முதல் தோல்வி

(மொகாலி)

டில்லி டேர்டேவில்ஸ் அணியை 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது யுவராஜ் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி.

இந்திய கிரிக்கெட் சபையால் ஆரம்பிக்கப்பட்ட இந்தியாவின் பிரிமியர் லீக் அமைப்பின் முதலாவது இருபது-20 தொடர் நடைபெற்று வருகிறது.


இதில் சர்வதேச பிரபல வீரர்கள், உள்ளூர் வீரர்கள் அடங்கிய 8 அணிகள் மோதுகின்றன. இத்தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் சுற்றின் 13ஆவது ஆட்டத்தில் சேவாக் தலைமையிலான டில்லி டேர்டேவில்ஸ் அணியும் யுவராஜ் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர்டேவில்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களையிழந்து 158 ஓட்டங்களை எடுத்தது.

இதில் திவாரி 39 ஓட்டங்களையும் தினேஷ் கார்த்திக் 24, மலிக் 19 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் வி.ஆர்.வி. சிங் 3 விக்கெட்டுக்களையும் இர்பான் பதான் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 159 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடடிய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி, ஹட்ரிச்சின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 19.3 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 162 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.



இதில் ஹட்ரிச் 52 பந்துகளில்(11 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் உட்பட) 75 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் யுவராஜ் சிங் 29 பந்துகளில் ( 3பவுண்டரிகள் 2சிக்ஸர்கள் உட்பட) 40 ஓட்டங்களும் எடுத்தனர்.

பந்து வீச்சில் மொகமட் ஆசிப் 2விக்கெற்றுக்களை வீழ்த்தினார். ஆட்ட நாயகனாக கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியின் வெற்றிக்கு வழிவகுத்த ஹட்ரிச் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் யுவராஜ் தலைமையிலான கிங்ஸ்லெவின் பஞ்சாப் அணி விளையாடிய 4 ஆட்டங்களில் 2ஆவது வெற்றியைப்பெற்றது. இதேவேளை இத்தோல்வியின் மூலம் டில்லி டேர்டேவில்ஸ் அணி, விளையாடிய 3ஆட்டங்களில் முதலாவது தோல்வியைச் சந்தித்துள்ளது. (5)

# உடல் வளர்ச்சி இல்லாதவர்களுக்கு தீர்வு தரும் லிம்ப் லென்தனிங் அறுவை சிகிச்சை

(சென்னை)

குறைந்த அளவு வளர்ச்சி உடையவர்களை சமுதாயத்தில் 'குள்ளர்கள்' என்று எள்ளி நகையாடி வந்தகாலம் இனி இருக்காது. காரணம் அவர்களுக்கு தீர்வு தரும் விதத்தில் 'லிம்ப் லென்தனிங்' என்ற அறுவைச் சிகிச்சை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



இவ்வகை அறுவைச் சிகிச்சையினை சமீபத்தில் சென்னையில் இயங்கிவரும் சவுந்தர பாண்டியன் எலும்பு மூட்டு மருத்து வமனை மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் மேற்கொள்ளப்பட்டது. இதுகுறித்து மேலும் விளக்கம் பெற அம்மருத்துவமனை யின் இயக்கு நரும், அறுவைச் சிகிச்சை நிபுணருமான சிவமுருகனுடன் தொடர்பு கொண்டபோது, ஈராக் நாட்டைச் சேர்ந்த சிறுமி (பெயர் நபார்) ஒருவருக்கு மூளை மற்றும் உடல்வளர்ச்சி நன் றாக இருந் தது.

ஆனால், கை, கால்களில் மட்டும் எலும்பு வளர்ச்சி இல்லாமல் இருந் தது. இந்நிலையில் உரிய மருத்து வபரிசோதனைக்குப் பிறகு சிறுமிக்கு 'லிம்ப் லென்தனிங்' என்ற நவீன அறுவைச் சிகிச்சை மூன்று கட்டங்களாக செய்யப்பட்டது. அறுவைச் சிகிச்சைக்கு முன்னர் 84 செ.மீ. அளவிற்கு உயரமாக இருந்த அவர் 6 மாதங்களில் 94 செ.மீ. ஆக வளர்ச்சியடைந் துள்ளார்.

இந்த வகை சிகிச்சையின் போது வளர்ச்சியடையாத எலும்புப் பகுதியை வெட்டிவிட்டு, இரண்டு பகுதிகளாகப் பிரித்து அவை அப் பாராட்டஸ் என்ற மருத்துவ உபகரணங்கள் மூலம் இழுக்கப்பட்டது.

தினசரி ஒரு செ.மீ. அளவுக்கு இது இழுக்கப்பட்டது. இதனால் கடந்த 6மாதங்களில் 12 செ.மீ. அளவுக்கு கை, கால்களின் எலும்புகள் வளர்ச்சியடைந்துள்ளன என்று கூறினார்.

மேலும் அவர், 'பரம்பரை காரணமா கவும் ஹோர்மோன் குறைபாடு காரணமா கவும் இம் மாதிரியான வளர்ச்சிக் குறைபாடு காரணமாகவும் இம் மாதிரியான வளர்ச்சி குறைபாடு நிகழலாம் என்றும் அதற்கு தற்போது 'லிம்ப் லென்தனிங்' என்ற முறையில் அறுவைச்சிகிச்சை செய்து தீர்வு காண இயலும் என்று குறிப்பிட்டார். (அ-5)

## உலக தரிசனம்

# ஈராக்கில் மோதல் 38 பேர் பலி

(பக்தாத்)

ஈராக்கில் கிழக்கு பக்தாத்தில் ஞாயிற்றுக் கிழமை இரவு நடைபெற்ற மோதல்களில் 38 பேர் கொல்லப்பட்டனர்.

சதார் நகரில் கடந்த சில வாரங்களாக அமெரிக்க கூட்டுப்படையினருடன் இணைந்து ஈராக் படையினருக்கும் சியாப் பிரிவு தீவிர வாதிகளுக்கும் இடையே நடைபெற்று வரும் சண்டை தீவிரமடைந்து வருகிறது. ஞாயிற்றுக் கிழமை இரவு தொடங்கி கையெறி குண்டுத் தாக்குதல் , ராக்கெற் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சண்டைகளில் 16 பேர் கொல்லப் பட்டனர்.

அமெரிக்க கூட்டுப்படையினர் பீரங்கித் தாக்குதல் நடத்தியதில் 22 பேர் கொல்லப்பட்டனர். சதார் நகரில் ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற மோதல்களில் தீவிரவாதிகள் உட்பட 439 பேர் கொல்லப்பட்டுள்ளனர். சதா நகரில் மோதல் தொடங்கியதிலிருந்து அமெரிக்கப் படை வீரர்கள் 15 பேர் கொல்லப்பட்டனர். (அ-5)

# சிம்பாவே மீது தடை விதிக்குமாறு ஐ.நா.விடம் அமெரிக்கா கோரிக்கை?

(சிம்பாவே)

ஆபிரிக்காவுக்கான அமெரிக்காவின் மூத்த ராஜாங்க அதிகாரியான ஜெண்டாயி பிரேசர் சிம்பாவே மீது ஐ.நா. தடைகளை விதிக்க தாங்கள் கோரப்போவதாக கூறியுள்ளார்.

சிம்பாவேவில் தேர்தல் நடந்து முடிந்து நான்கு வாரங்கள் ஆகியுள்ள போதிலும் முடிவுகள் இன்னும் அறிவிக்கப்படவில்லை.


தென்னாபிரிக்காவுக்கான விஜயம் மேற்கொண்டு இருக்கும் ஜெண்டாயி பிரேசர் அரசாங்கத்தின் ஆதரவில் நடைபெறும் வன்முறை களை தடுக்க சர்வதேச அழுத்தங்கள் அதி கரிக்க வேண்டும் என்று கூறினார்.

தேர்தல் நடந்து முடிந்த பின்னர் நானூற்று ஐம்பதுக்கும் அதிகமானவர்கள் தாக்குதலுக்கு இலக்காகி இருப்பதாக தனக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் பிபிசியிடம் தெரிவித்தார். (அ-5)

# ஒரே தடவையில் 10 செயற்கைக் கோள்களை விண்ணுக்கு அனுப்பி இந்தியா புதிய சாதனை

(ஸ்ரீஹரிகோட்டா)

ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் 10 செயற்



கைக் கோள்களை நேற்று வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. பிஎஸ்எல்விசி9 செலுத்து வாகனம் மூலம் இந்த செயற்கைக் கோள்கள் ஏவப்பட்டன.

நேற்று காலை 9.23 மணிக்கு பிஎஸ் எல்வி வாகனம் ஆரஞ்சு நிறத்தில் புகையை கக்கியபடி சர்ரென்று விண்ணில் பாய்ந்தது. இந்தியாவின் புதிய ரிமோட் சென்சிங் செயற்கைக் கோள் மற்றும் இந்தியன் மினி சாட்டிலைட் (ஐஎம்பிஎஸ்1) ஆகிய செயற்கைக் கோள்கள் மற்றும் வெளிநாடுகளை சேர்ந்த 8 நானோ செயற்கைக் கோள்கள் ஏவப்பட்டுள்ளன.

கார்டோசாட் 2 ஏ எனப்படும் புதிய ரிமோட் சென்சிங் செயற்கைக்கோள் 690 கிலோ எடை கொண்டது. இதில் பான் எனப்படும் அதிநவீன கேமரா பொருத்தப்பட்டுள்ளது. கனடா மற்றும் ஜெர்மனியில் உள்ள பல் கலைக் கழகங்களால் உருவாக்கப்பட் நானோ செயற்கைக் கோள்கள் வர்த்தக அடிப்படையில் செலுத்தப் படுகின்றன.

ஒரே நேரத்தில் 10 செயற்கைக் கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டதன் மூலம் இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் புதிய சாதனை படைத்துள்ளது. (அ-5)

# குளோனிங்கில் பிறந்த நாய்களுக்கு மோப்பப்பயிற்சி

(சியோல்)

உலகில் முதன்முறையாக சுங்கத்துறையில் குளோனிங் நாய்களை தென்கொரியா சேர்க்கவுள்ளது. இந்த நாய்களுக்கு இப் போது மோப்ப பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. உடலில் உள்ள செல்லில் இருந்து செயற்கையாக உருவாக்குவதுதான் குளோனிங் முறை. நகல் எடுத்தாற் போல, மனிதனை, பிராணிகளை உருவாக்கும் புரட்சிகர விஞ்ஞான முறை இது.

தென்கொரிய விஞ்ஞானி லீ பையிங் சுன்; உலகின் முதல் குளோனிங் நாயை உருவாக்கியவர். ஆப்கானிஸ்தானை சேர்ந்த, ஹீண்ட் ரக மூன்று வயது நாயின் செல்லில் இருந்து குளோனிங் நாயை உருவாக்கி சாதனை படைத்தவர். கடத்தல் பொருட்களை மோப்பம் பிடிக் க, சுங்கத்துறையில் மோப்ப நாய்களை அதிகம் சேர்ப்பதற்காக, குளோனிங் நாய்களை உருவாக்கும் திட்டத்தை இவரிடம் அரசு ஒப் படைத்துள்ளது.

முதல் கட்டமாக ஏழு நாய்களை, குளோனிங் முறையில் உருவாக் கியுள்ளார். இவர் ஏற்கனவே மோப்பம் பிடித்துவரும், கோல்டன் ரிட்ரீவர் ரகத்தை சேர்ந்த, சேஸ் என்ற நாயின் உடலில் இருந்து செல்லை எடுத்து சோதனைச்சாலையில் ஏழு கருக்கள் தயார் செய்யப்பட்டன. வேறு சில நாய்களை, வாடகைத்தாயாக பயன்படுத்தி, அவற்றின் கருப்பையில் இந்த கருமுட்டைகளை வைத்து சில மாதங்கள் வளரச்செய்து குளோனிங் நாய்க் குட்டிகள் உருவாக்கப்பட்டன.

இந்த ஏழு குளோனிங் நாய்களும் இப் போது வளர்ந்து விட்டன. இவற்றுக்கு மோப்



பப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. விரைவில் சுங்கத்துறையில் மோப்பம் பிடிக்க சேர்க் கப்படும். இயற்கையாக பிறந்து, பயிற்சி பெறும் மோப்ப நாய்களை விட, குளோனிங் நாய்கள் மிகுந்த திறமையாக செயல்படும் என்று எதிர் பார்க்கிறோம். பயிற்சியின்போது அசாத்திய திறமை காட்டுகின்றன என்று சுங்கத் துறை அதிகாரி கூறினார். (அ-5)

# மெக்சிகோவில் நில நடுக்கம்

(மெக்சிகோ)

வட அமெரிக்க நாடுகளில் ஒன்றான மெக்சிகோவில் நேற்று அதிகாலை 5.30 மணிக்கு பயங்கர நில நடுக்கம் ஏற்பட்டது. மெக்சிகோ நாட்டின் தெற்கு பகுதியில் ஏற்பட்ட இந்த நில நடுக்கம் பூமிக்கு, அடியில் 88 கி.மீ ஆழத்தில் மையம் கொண்டிருந்தது.

தலைநகர் மெக்சிகோ நகரம் உட்பட மெக்சிகோ நாடு முழுவதும் நில நடுக்கத்தை மக்கள் உணர்ந்தனர். ரிச்டர் அளவு கோலில் 5.8 என்ற அளவுக்கு நில நடுக்கம் பதிவாகி இருந்தது.

நிலநடுக்கத்தால் பெரிய அளவில் எந்த பாதிப்பும்ஏற்படவில்லை. உயிர்ச்சேதமும் இல்லை. சிலருக்கு காயம் ஏற்பட்டதாக தெரிய வந்துள்ளது.

நிலநடுக்கத்துக்கு பயந்து வீடுகளில் தூங்கியவர்களும், சுற்றுலா பயணி களும் அலறியடித்து ஓடினார்கள். சிறிது நேரத்தில் சகஜ நிலை திரும்பி விட்டது. (அ-5)

# புகைவண்டிகள் தடம் புரண்டதில் சீனாவில் 60 பயணிகள் பலி

(பீஜிங்)

சீனாவில் கிழக்குப் பகுதியான ஷேன் டாங் மாகாணத்தில் உள்ள சுற்றுலா தலமான குயிங்டாவ் நகரில் இருந்து தலைநகர் பீஜிங் நோக்கி பயணிகள் புகை வண்டி வந்து கொண்டு இருந்தது. நேற்றுக் காலை ஜிபோ நகரில் வந்தபோது திடீர் என்று அந்த புகை வண்டி தடம் புரண்டு அருகில் உள்ள தண்டவாளத்தில் விழுந்தது.

அப்போது அந்த தண்டவாளத்தில் மற்றொரு புகைவண்டி வேகமாக வந்து கொண்டிருந்தது. அந்த புகைவண்டி மீது தடம் புரண்ட புகைவண்டியின் பெட்டிகள் பயங்கரமாக மோதி கவிழ்ந்தன. சில் பெட்டிகள் அருகில் இருந்த கால்வாய்க்குள் விழுந்தன.

உடனே மீட்பு குழுவினர் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். இதில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டு இருக்கும் என்று மீட்பு குழுவினர் தெரிவித்தனர். ஏராளமான பயணிகள் காயங்களுடன் மீட்கப்பட்டு அம்புலன்ஸ்களில் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டனர். (அ-5)

# இஸ்ரேலின் தொடர் கட்டுப்பாடுகளால் பாலஸ்தீன பொருளாதாரம் பாதிப்பு

## உலக வங்கி

(இஸ்ரேல்)

பாலஸ்தீன பகுதிகள் இடையிலான மக்கள் நடமாட்டத்தின் மீது இஸ்ரேல் தொடர்ந்து விதித்துவரும் கட்டுப்பாடுகள் பாலஸ்தீன பொருளாதார முன்னேற்றத்துக்கு தொடர்ந்தும் இடையூறாக அமைந்துள்ளது என உலக வங்கி கூறியுள்ளது.

பாலஸ்தீன பகுதிகளில் வாழும் மக்களின் தனிநபர் வருமானம் 2007 ஐ பொறுத்த வரை மேம்படவே இல்லை என்று உலக வங்கி கடைசியாக வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

மக்கள் நடமாட்டத்தின் மீதான தடைகள் 2005இல் இருந்ததுடன் ஒப்பிடுகையில் கணிசமாக அதிகரித்துள்ளன என்றும் இஸ்ரேலின் தடைகள் காரணமாக காசாப் பகுதி கிட்டத்தட்ட முழுமையாகவே மேற்குக் கரையிலிருந்து துண்டிக்கப்பட்டுள்ளது என்றும் அது தெரிவித்துள்ளது.

பாலஸ்தீன தீவிரவாதிகளின் தாக்குதல் களைத் தவிர்ப்பதற்காகவே இந்த நடவடிக் கைகளை எடுத்துள்ளதாக இஸ்ரேலியர்கள் கூறுகின்றனர். (அ-5)

# அழுகைப் போட்டி



ஜப்பானின் டோக்கியோ நகரில் இடம்பெற்ற வருடாந்த குழந்தைகளுக்கான அழுகைப் போட்டியில் பங்கேற்ற குழந்தையொன்று, சுமோ விளையாட்டு மாணவரால் அழ வைக்கப்படுவதை படத்தில் காணலாம். இப் போட்டியில் சுமார் 80 குழந்தைகள் பங்கேற்றன.

# இரத்த அழுத்தம் என்றால் என்ன...?

உடல் சீராக இயங்க இரத்த ஓட்டம் அவசியம். இரத்தம் என்பது ஓடிக்கொண்டே இருப்பது. அதனை இயக்கும் பம்ப்பாக இருதயம் இருக்கிறது. இருதயம் தான் இந்த இரத்தத்தை எல்லா உறுப்புக்களுக்கும் பம்ப் செய்து அவை சீராக செயல்பட உதவுகிறது. அது சீரற்று இரத்தத்தை மிகையாக அழுத்தும் போது இரத்த அழுத்தம் ஏற்படுகிறது.

***இரத்த அழுத்தம் ஏன் ஏற்படுகிறது...?***

பொதுவாக உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்பார்கள். ஆனால் இந்த உப்புத் தான் உடலுக்குப் பகைவன். உயர் இரத்த அழுத்தத்தின் துணைவன். உப்பு அதிகமாகச் சேர்ப்பதே இதன் முக்கிய காரணம் என்றாலும், மரபு வழியாகவும் உடற்பருமனும், மன உளைச்சலும் இதன் காரணங்களாகின்றன.

***இதில் இரண்டு வகை சொல்கிறார்களே அதுபற்றி விளக்கம்?***

அதாவது 'சிஸ்டாலிக் பிரசர்' இதயம் அழுத்திச் சுருங்கும் போது ஏற்படுவது டய்ஸ்டாலிக் பிரசர் என்பது இதயம் தளர்ந்து விரியும் போது ஏற்படுவது இதன் சராசரியான அளவுகள் 120/80 என்பதாகும்.

***உயர் இரத்த அழுத்தத்தின் அறிகுறிகள் யாவை?***

இதற்கு எந்த அறிகுறியும் இல்லாமல் வருவது. அதனால் தான் இதற்கு அமைதியான ஆட்கொல்லி என்று பெயர். இதன் தாக்கம் என்பது தலைசுற்றல், தலைவலி, நடக்கும் போது மூச்சு வாங்குதல் போல் தெரி தல், மயக்கம் போன்ற தொல்லைகள் ஏற்படலாம்.

***இதனால் ஏற்படும் ஆபத்துக்கள் யாவை...?***

உயர் இரத்த அழுத்தத்தைக் கவனிக்காமல் விட்டுவிட்டால் மூளை, இருதயம், சிறுநீரகம் போன்றவை பாதிக்கப்பட்டு, மாரடைப்பு, பாரிசவாயு, நினைவிழத்தல், சிறுநீரகம் செயலிழப்பு, கண்பார்வை பாதிப்பு, கைகால் வீக்கம், மூக்கில் இரத்தம் வடிதல் போன்றவை ஏற்படும்.

***இதனைக் கட்டுப்படுத்தும் முறைகள் யாவை...?***

நல்ல உணவுப் பழக்கம், முக்கியம். உப்பும் உப்புச் சார்ந்த ஊறுகாய், அப்பளம், நொறுக்குத் தீனிகள், கருவாடு போன்றவற்றைக் கண்டிப்பாகத் தவிர்க்கவேண்டும். தினமும் 45 நிமிடம் கைவீசி நடக்கவேண்டும். மன உளைச்சலுக்கு இடந்தருதல் ஆகாது. உச்சிமீது வானிடிந்து வீழ்ந்தாலும் கலங்காமல் எதையும் எளிதாகக் கொள்ளும் கொள்கையைக் கடைப்பிடித்தால் என்ன செய்யப் போகிறது. உயர் இரத்த அழுத்தம்?

***இதற்கான முதல் உதவிகள் யாவை...?***

முறையான உடற்பயிற்சி, மருத்துவரின் ஆலோசனை அடிக்கடி கேட்டல், மருந்துகளை ஒழுங்காக உட்கொள்ளல், பால், பலசரக்கு, பண்டிகைக்குப் பணம் ஒதுக்கல் போல் மருந்துக்கும் பணம் ஒதுக்கி வைத்தல், புகை பிடிப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்தல், எப்போதும் முக மலர்ச்சியுடன் இருத்தல் போன்றவை.

***இரத்த அழுத்தம் வராதவர்கள் அதனை அப்படியே தக்கவைத்துக் கொள்ளும் உபாயங்கள் யாவை..?***

இரத்த அழுத்தம் வராதவர்கள் என்று யாருமே இருக்க வாய்ப்பில்லை. எல்லோருக்கும் வரலாம். காரணம் வயது ஏற.. ஏற உடல் உறுப்புகளில் மாற்றம் ஏற்படுகிறது. அதற்குத் தகுந்தாற் போல் நோய்கள் வருகிறது. எப்படி வயது காரணமாக கண்புரை நோய் சதைச் சுருக்கம் போன்றவை ஏற்படுகி



றதோ அதுபோல் தான் இதுவும்.

ஆனால் சிலபேருக்கு குறிப்பாக காட்டு வாசிகள் சிலரை இரத்த அழுத்தம் அண்டுவதில்லை என்கிறார்கள். அப்படி ஒரு 10 சத விகிதம் இருக்கலாம். ஆனாலும் சாத்தியமில்லை. காரணம் இது வயது சம்பந்தப்பட்டது. அப்படி உங்களில் யாருக்கேனும் வரவில்லை என்றால் நீங்கள் யோகக்காரர்கள்.

எல்லோருக்கும் அப்படி ஒரு யோகம் அடித்தால் நல்லது தான். சோம்பலைத் துரத்தி, முக மலர்ச்சி கூட்டி, மன உளைச்சல் நீக்கி வாழ்ந்தால் இதனைக் கட்டுப்படுத்தலாம்.

***இதுவரை உயர் இரத்த அழுத்தம் பற்றியே கூறினீர்கள். அழுத்தக் குறைவு (லோபிரசர்) பற்றிக் கூறுங்களேன்...?***

அழுத்தம் குறைந்த, குறைந்த இரத்தம் அழுத்தம் பற்றி கவலையே வேண்டாம் அதனால் தொல்லைகள் இல்லை. அவர்கள் அளவாக உப்புச் சேர்க்கலாம். உணவு விஷயங்களில் கூட உயர் இரத்த அழுத்தகாரர்களுக்குத் தான் கெடுபிடிகள். இவர்களுக்கு இல்லை. அதற்காக எப்படியும் சாப்பிடலாம் என்றில்லை. அளவான நல்ல உணவுப் பழக்கவழக்கங்கள் போன்றவை எல்லோருக்கும் அவசியம்தானே?

**மீன் சாப்பிட்டால் எந்த கவலையும் இல்லை**

மீன் சாப்பிடும் பழக்கம் உள்ளவர் என்றால், நீங்கள் எந்த நோய் பற்றியும் கவலைப் படவேண்டாம். ஆஸ்துமா முதல் இருதய நோய் வரை எதுவும் உங்களை அண்டவே அண்டாது.

ஏகப்பட்ட மருத்துவ நிபுணர்கள் மீன் உணவில் உள்ள மருத்துவ குணங்கள் பற்றி பலமுறை எடுத்துச் சொல்லிவிட்டனர். மீன் உணவில் கொழுப்பு அறவேயில்லை. அதிகமாக புரோட்டீன் சத்துள்ளது. இதன் "ஓமேகா 3" என்ற ஒருவகை அசிட், வேறு எந்த உணவிலும் இல்லை. உடலில் எந்த நோயும் அண்டாமலிருக்க, இந்த அசிட் பெரிதும் உதவுகிறது. அதனால் தான் மீன் உணவு சாப்பிடுபவர்களுக்கு அவர்கள் அறியாமலேயே 'ஓமேகா 3' கிடைக்கிறது.

அதனால், வாரத்தில் குறைந்தபட்சம் 1அல்லது 2 முறையாவது மீன் உணவு சாப்பிட்டு வருவது மிகமிக நல்லது.

***எந்த நோய் வராது?***

- **ஆஸ்துமா:** மீன் உணவு சாப்பிட்டு வருவோருக்கு ஆஸ்துமா நோய் வரவே வராது. அதிலும் குழந்தைகளுக்கு மீன் உணவு கொடுத்து வந்தால், அவர்களுக்கு கண்டிப்பாக ஆஸ்துமா வரவே வராது.
- **கண்பாதிப்பு:** மூளைக்கும், கண் பார்வைக்கும் மிகவும் பயனளிக்கிறது. மீன் உணவில் உள்ள 'ஓமேகா 3' அசிட், மூளை சுறு சுறுப்பாக இயங்கவும், கண்பார் வையில் பாதிப்பு வராமலும் செய்கிறது இது.
- **கான்சர்:** பலவகை புற்று. நோய் வராமல் தடுப்பதில் 'ஓமேகா 3' யின் பங்கு 70 சதவீதம் வரை உள்ளது. மீன் உணவு சாப்பிடும் பெண்களுக்கு மார்பக புற்றுநோய் உட்பட எந்த வகை புற்றுநோயும் வராது.
- **இருதயநோய்:** கொழுப்பு அறவேயில்லாமல் இருப்பதால், இருதய பாதிப்பு வருவது என்ற கேள்விக்கே இடமில்லை. இரத்தம் கட்டுவது, இரத்த குழாய் நீக்கம், வால்வு பிரச்சினை போன்ற எதுவும் வராது. இருதயத்திற்கு மிகுந்த பாதுகாப்பைத் தருகிறது மீன் உணவு.

***எப்படி சாப்பிடணும்?***

மீன் உணவை எந்த வகையில் சாப்பிட்டாலும், அதன் சத்துக்கள் போகாது. நன்றாகச் சமைக்கவேண்டும். எலுமிச்சை மற்றும் ஒலிவ் ஒயில் மூலம் தயாரித்தல் நல்லது.

வாணலியில் சிறிய அளவு வெண்ணெய் போட்டும் பொரித்துச் சமைக்கலாம். 'ஓவன்' சாதனத்தில் வைத்தும் சமைக்கலாம். உறைய வைக்கப்பட்ட மீனாக இருந்தால் அதற்கேற்ப, நேரம் விட்டு சமைக்கவேண்டும். சில வகை மீன்களில் பாதரசம் அதிகம். அதனால் அவற்றை சமைக்கும்போது மிகுந்த கவனம் தேவை. பாதரசம் அதிகமுள்ள மீன் வகையாக இருந் தால், கருத்தரிக்க இருக்கும் பெண்களும், ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளும் தவிர்த்து விடவேண்டும்.

மோசமாக உள்ள குளங்கள், குட்டைகளில் பிடித்த மீன்களை சமைத்துச் சாப்பிடக் கூடாது. அதனால் வேறு பாதிப்புகள் வரலாம்.

**குண்டாக இருப்பவர்களுக்கு மாரடைப்பை தாங்கும் சக்தி அதிகம்**

மாரடைப்பு வந்தபின்னர், ஒல்லியாக இருக்கும் நபர்களை விட, குண்டாக இருப்பவர்களால் எளிதாகத் தாங்கமுடிகிறது. அவர்களுக்கு உயிர் பிழைக்கும் வாய்ப்பும் அதிகம் என்று கண்டுபிடித்துள்ளனர். அமெரிக்காவில் உள்ள டேவிட் ஷெபன் மருத்துவ ஆராய்ச்சி மைய நிபுணர்கள்.

ஒரு மனிதனின் பி.எம்.ஐ. என்று சொல்லப்படும் எடை, உயர கூட்டு அளவைக்கும், அவர் மாரடைப்பால் பாதிக்கும்போது அளிக்கப்படும் சிகிச்சைக்கும் தொடர்பு உள்ளது என்று இப்போது தான் முதல் முறையாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குண்டாக இருந்தால் அவர்களுக்கு இருதயக் கோளாறு நிச்சயம் என்றுதான் இதுவரை சொல்லப்பட்டு வருகிறது. அதேசமயம் மருத்துவமனையில் மாரடைப்புக்காக சேர்க்கப்படும்போது நோயாளி ஒல்லியாக இருந்தால் தாங்கும் சக்தியை இழக்கிறார். அதனால் அவருக்கு உயிரிழப்பு ஏற்படும் அபாயமும் அதிகம்.

குண்டாக இருப்பவர், அதைத் தாங்கும் சக்தியைப் பெற்றிருப்பதால் அவரால் பிழைக்கும் வாய்ப்பையும் அதிகம் பெறமுடிகிறது என்பதுதான் இவர்களின் ஆய்வு முடிவு.

கடந்த 2001 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 10ஆயிரம் மாரடைப்பு நோயாளிகள் விடயத்தில் இந்த வேறுபாடு பற்றி ஆராயப்பட்டது. அப்போதுதான் இந்த உண்மை தெரியவந்தது. இன்னும் இதுபற்றி ஆராய வேண்டியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து, டில்லியில் உள்ள இருதய மருத்துவ நிபுணர் கே.கே.அகர்வால் கூறுகையில், வயதானவர்களின் பி.எம்.ஐ.. என்று




சொல்லப்படும் உடல் எடை, உயரம் என்பது அவர்களுக்கு எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. அப்படிப்பட்டவர்கள் மாரடைப்பு வந்து மருத்துவமனையில் சேரும்போது, அவர்களால் தாங்கிக்கொள்ள முடிகிறது. அவர்களுக்கு நோய்க் கோளாறுகளை அதிகரிக்க வாய்ப்பு இல்லாமல் செய்கிறது. அவர்களின் தாங்கும் சக்தி என்றார்.

---

# வாகனப் புகையால் மூளையில் பாதிப்பு

## மருத்துவ ஆராய்ச்சியில் திடீர் தகவல்

உலகம் முழுவதும் சுற்றுச்சூழல் சீர்கேடு காரணமாக, நோய்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. இதனால், தினமும் புதுப்புது வியாதிகளுடன் மருத்துவமனைகளுக்கு வருபவர்களின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது.

வாகனங்களிலிருந்து வெளிவரும் புகையால், காற்று மாசுபடுகிறது. இந்த அசுத்தமான காற்றை சுவாசிப்பவர்களுக்கு மூளையின் செயல்பாட்டில் பாதிப்பு ஏற்படும் என அண்மையில் நடத்தப்பட்ட ஆராய்ச்சி ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



நெதர்லாந்தின் சுயித் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், அண்மையில் ஆராய்ச்சி ஒன்றை மேற்கொண்டனர். அதன்படி, தன்னார்வலர்கள் 10பேரை தேர்ந்தெடுத்து, அவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்து தனி அறைகளில் அமரச் செய்தனர். அவர்களின் உடல்களின் சுற்றப்பட்ட வயர்கள், மூளையின் மின்காந்த சமிக்ஞைகளை பதிவு செய்யும் இஇஜி (EEG) சாதனத்துடன் பொருத்தப்பட்டன.

ஒரு குழுவினர் தூய காற்றை சுவாசிக்கவும், மற்றொரு குழுவினர், வாகனங்களிலிருந்து வெளியேறும் காற்றை சுவாசிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி, அந்த அறைகளில் அவர்கள் ஒரு மணி நேரம் செலவிட்டனர். அப்போது அவர்களின் மூளையின் செயற்பாடுகள் குறித்து கண்காணிக்கப்பட்டது.

அதேபோல், அந்த அறையை விட்டு வெளியே வந்தபிறகும் ஒரு மணிநேரம், அவர்களின் மூளையின் செயற்பாடு குறித்து ஆராயப்பட்டது. வாகனப்புகையை சுவாசித்தவர்களின் மூளையில் அரைமணி நேரத்திற்குப் பின், அழுத்தம் ஏற்படுவதற்கான சமிக்ஞைகளை இஇஜி, சாதனம் காட்டியது.

மூளையின் கார்டெக்ஸ் பகுதியின் தகவல் பரிமாற்றத்தில் பாதிப்பு ஏற்படுவதும் கண்டறியப்பட்டது. அவர்கள் அறையை விட்டு வெளியே வந்த பிறகும் இந்தப் பாதிப்பு நீடிப்பது தெரியவந்துள்ளது. அதேநேரத்தில், சுத்தமான காற்றை சுவாசித்தவர்களின் மூளையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

வாகனப் புகையை சுவாசிக்கும்போது, அதில் உள்ள nanoparticles எனப்படும் நுண்ணிய துகள்கள், மூளை சென்றடைவதும், அதனால், தகவல் தொடர்பு பாதிக்கப்படுவதும் இந்த ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டுள்ளது. இதன்மூலம், ஒரு மணிநேரத்திற்கும் மேல் வாகனப்புகையைத் தொடர்ந்து சுவாசிக்க நேரிட்டால், தலைவலி ஏற்படுவதுடன், மூளையின் சயல்பாடுகளில் பாதிப்பு ஏற்படுவது நிரூபணமாகியுள்ளதாக இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்ட விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்மூலம் வாகனநெரிசல் மிகுந்த நகரங்களில் வசிக்கும் மக்கள், தொடர்ந்து அசுத்தமான காற்றை சுவாசிக்க நேரிட்டால், அவர்களுடைய மூளையின் செயற்பாடு பாதிக்கப்படக்கூடும் என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

ஏற்கனவே, காற்று மாசுபாடு காரணமாக உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துவரும் நிலையில், தற்போது மூளையின் திறனும் பாதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



# பாவேந்தர் பாரதிதாசனின் 117ஆவது பிறந்த நாள்!

மகா கவிஞானி பாரதியாரின் தனிப் பெரும் தலைமைச் சீடனாகத்திகழ்ந்தவர், திகழ்பவர் 'பாவேந்தன்' பாரதிதாசன்! பாரதியின் முன்னிலையில் 'எங்கெங்கும் காணினும் சக்தியடா!' எனத் தொடங்கும் தனது கவியை முழங்கிய பாரதிதாசனைப் பார்த்து, 'பலே! பாண்டியா! நீ கவிஞன்!!'

என்றுரைத்து 'கவிதாமகுடம்' சூட்டி மகிழ்ந்தார் பாரதி. 'மகா கவிஞானி' யுடனான தனது அறிமுகக் கவிதையினாலேயே 'அறிவுலக கவிஞனாக' அவனால் அங்கீகரிக்கப் பெற்ற பாரதிதாசன், 'அந்த எட்டயபுரத்து எழுஞாயிறின்' மறைவுரை அவனோடு இறுக்கமானதும் இணக்கமானதுமான உறவுப் பெரும் பிணைப்பை வைத்திருந்தார். பாரதியைப் பற்றி இழித்தோ, பழித்தோ நேருக்கு நேர் கதைத்தவர்களுக்கு உடன் '*உதையடியும்*' மறைமுகமாகக் கதைத்தும் எழுதியும் வந்தவர்களுக்கு தக்க '*உரையடியும்*' தாராளமாகவே கொடுத்தவர் பாரதிதாசன். எந்தவித கைமாறும் எதிர்பாராத, அப்பழுக்கேதும் இல்லாத 'பாரதி பக்தி' பாரதிதாசனுக்கு நிறைவாக இருந்தமையின் விளைவுகளே, மேற்கண்ட '*உதையடியும் உரையடியும்!*' மகா கவிஞன் பாரதியின் பெருமதிப்புக்கும் பேரன்புக்கும் உரியவனாகத் திகழும்பாரதிதாசனை மட்டுமே போற்றிக் கொண்டாடுவோர் பாரதியை மட்டம் தட்டுவதும், பாரதியை மட்டுமே போற்றிக் கொண் பாடுவோர் பாரதிதாசனை மட்டம் தட்டுவதுமான இரு வித 'கயமை போக்குகள்' கலை இலக்கிய உலகில் இருப்பதுதான் வேதனையிலும் வேதனை! இத்தகைய கயமைப் போக்குகளுக்கான பின்னணிக் காரணங்களாக எனக்குத் தெரிவன இரண்டே இரண்டுதான்! பாரதியோ அதிதீவிர ஆஸ்திகன்! பாரதிதாசனோ அதி தீவிர நாஸ்திகன்! எனவே, அதி தீவிர ஆஸ் திகவாசிகள் பாரதியை தலை மீது தூக்கிவைத்துக் கொண்டு பாரதிதாசனை காலால் மிதிக்கிறார்கள். அதி தீவிர நாஸ்திகவாதிகளோ பாரதிதாசனை தலைமீது தூக்கி வைத்துக் கொண்டு பாரதியை காலால் மிதிக்கிறார்கள். மானிடத்தையே வெட்கப்படுத்தித் தலைகுனிய வைக்கும் இவ்வாறான 'வேடிக்கை மனிதர்களிலே' சிலரோ, '**பாரதிதாசனின் ஒரு சில கவிதைகளை விட்டால் அவரிடம் கவித் தரம் வாய்ந்த கவிதைகளே இல்லை. அவரின் பெரும்பான்மை யான மற்றைய கவிதைகளிலே ஒன்றுமே இல்லை. பாரதியின் பெரும்பான்மை கவிதைகளுடன் ஒப்பிடும்போது, பாரதிதாசனை பெரும்பாலான கவிதைகள் வீண்குப்பை தான்!**' என்றவாறெல்லாம் எனது காதுபட கதை பறைந் திருக்கிறார்கள். எந்த தைரியத்திலும் இவர்கள் இவ்வாறெல்லாம் கதை அளக்கின்றார்கள்? தங்களைத் தாங்களே சரியாகவும் தெளிவாகவும் அளவிட முடியாத இந்தக் கலை இலக்கிய 'மே(ல்) தாவிகள்' பாரதிதாசனின் கவித்துவத் தராதரத்தை 'அளவிட' முனைந்து நிற்பதை அறியாமை என்று கொள்ளவா? அன்றேல் அநியாயம் என்று கொள்ளவா? பாரதியின் எதிர்ப்பாளர்கள் கூட, பாரதியின் அதி தீவிர ஆஸ்திக வாதத்தையும் அரசியல் கொள்கைகளையும் தான் மறுதலித்திருக்கின்றார்களே தவிர அவரின் கவிதை களையோ கவித்துவ திறனையோ மறுதலிக்கவே இல்லை. ஆனால் பாரதிதாசனின் எதிர்ப்பாளர்களோ பாரதிதாசனின் கொள்கை இலட்சியங்களை மட்டுமல்லாது அவரின் கவிதைக ளையுமே நிராகரிக்கின்ற 'பன்னாடைகளாக' உருவெடுக்கின்றனர். இதனால் எல்லாம் பாவேந் தன் பாரதிதாசனின் கவித்துவ புகழ் மங்கவே மங்காது ஏனெனில், நடுவு நிலை தவறாத கலை இலக்கியச் சுவைஞர்கள் பல்லாயிரக் கணக்கானோர் பாரதியை பாரதியாகவும், பாரதிதாசனை பாரதிதாச னாகவும் பார்க்கவும் படிக்கவும் பாதுகாக்கவும் உறுதியோடும் தெளிவோடும் காத்திருக்கின்றார்கள்.

**ஜெ.கி. ஜெயசீலன்**

இன்று பாவேந்தர் பாரதி தாசனின் 117 ஆவது பிறந்தநாளாகும். அவ ரின் ஒரே மகன்



கவிஞர் மன்னர் மன்னன் அவர்கள் தன் தந்தை பாரதிதாசனைப் பற்றி 'என் தந்தை' என்கிற பொதுத்தலைப்பில் 16.09.2003 'குமுதம்– ஜங்ஷன்' வார இதழுக்கு வழங்கிய நேர்காணல் கட்டுரையிலிருந்து சில சூடும் சுவையுமான பகுதிகள் வாசகர்களுக்காக நாளைய வலம்புரியில் வெளிவரும்.

# பேரறிஞர் பிதா லோங் அடிகள்

## 47ஆவது நினைவு தினம் (30.04.2008)

வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி, மக்கள் மனதில் நிலைத்தவர் சிலரே. இந்த



வரிசையில் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களில் யாழ்.மண்ணைத் தம் உயிருக்கு மேலாக நேசித்த பெருமகனார் பிதா T.M.F. லோங் அ.ம.தி அடிகளார் என்றால் அது மிகையாகாது.

இவரை யாழ் மக்கள் காலமெல்லாம் சிரந்தாழ்த்தி, கரங்கூப்பி நன்றிப் பெருக்குடன் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளோம். யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் தன்னிகரில்லாத புகழ்பூத்த அதிபராக *பிதா திமொத்திமேரி பிரான்சீஸ்லோங்* M.A.(Cantab) அடிகள் 1936-1954 வரை அதி சிறப்புப் பணியாற்றினார். இவரின் மாபெரும் பணியைப்போற்றி இலங்கை அரசு 22.05.1990 இல் முத்திரை வெளியிட்டுக் கௌரவித்தது.

**தியாகிகளை உருவாக்கிய குடும்பம்**

அயர்லாந்திலுள்ள லிமெறிக் என்னுமிடத்தில் கல்வியிலும் விசுவாசத்திலும் வைரத் தூண்களாகத் திகழ்ந்த உத்தம லோங் தம்பதிகள் மூன்று நற்புத்திரர்களையும் ஒரு நற்புத்திரியையும் ஈன்றெடுத்து கல்விமான்களாக உருவாக்கி இயேசுவின் தொண்டிற்கே அர்ப்பணித்த தியாகிகள், புனிதக் கனியான தியாகப் புதல்வன் பிதாT.M.F லோங் அடிகள் மூலம் பெற்றோரை நன்றிப் பெருக்குடன் நினைவு கூர நாம் கடமைப்பட்டுள்ளோம். இவரது அண்ணன் அருட் கலாநிதி பிறெட்ரிக், இவரது தம்பி அருட் கலாநிதி டானியல், இவரது தங்கை அருட்சகோதரி எமா அனைவரும் இயேசுவின் திராட்சைதத் தோட்டத்தில் உத்தம பணியாளர்கள் என்பனவும் நினைவு கூரப்பாலன.

**யாழ் நூலகம்-பிதா லோங்**

யாழ் நூலகம் தென்கிழக்காசியாவின் மணிமுடியெனத் திகழ பிதாலோங் அடிகள் மேற்குலக நாடுகளுக்குச் சென்று தமது தொப்பியை நீட்டி யாசகம் செய்து நற்கைங்கரியத்திற்காக அன்று ஒருகோடி ரூபா நிதியத்தைத் திரட்டி ஒப்படைத்தார். 'நல்ல தொரு நூலகம் சிறந்ததொரு பல்கலைக்கழகம் என்பதைச் செயல் உருவப்படுத்திய ஆன்றவிந்த சான் றோனை மதித்து 20.12.1975 இல் நன்றிமறவேல் (BE GRATEFUL)

என்பதற்கு ஏற்ப யாழ் . புனித பத்திரிசியார் கல்லூரிப் பழைய மாணவ தாய்ச்சங்கத்தினர் (S.P.C -O.B.A) அமரர் Dr.J.P.C. பிலிப்ஸ் J.P. தலைமையில் உந்து சக்தி மிக்க செயல் குழுவின் கடினமுயற்சியினால் யாழ். நூலகத்தின் நுழைவாயிலில் பேரறிஞர் T.M.F. லோங் அடிகளின் சிலையை நிறுவி அன்றைய யாழ்.அரசாங்க அதிபராக இருந்த அன்ரன் அல்பிரட் அவர்களினால் திறக்கப்பட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. 33 வருடம் சென்றும் அன்றைய நிகழ்வு இன்றும் என் உள்ளத்தில் பசுமையாக காட்சியளிக்கின்றது.

யாழ்.நூலகம் மீண்டும் புதுப் பொலிவோடு மிளிரும் வேளையில் யாழ். மக்களுக்கு பெரும்பணி செய்த பேரறிஞர் லோங் அடிகளின் 47 ஆவது நினைவு தினம் 30.04.2008 போர் காலத்தில் றோயல் விமானப்படை ஓடு தளமாக உபயோகிக் கப்பட்டு பலாலிவிமானத் தளத்தை சிவில் விமானத்துறையாக மாற்றிய பெருமைக்கும் மகிமைக் கும் உரியவர் பிதா லோங் அடிகள் என்றால் அது வெள்ளிடைமலையாகும்.

**கலை இன்பமே நிலை இன்பம்**

யாழ்.புனித· பத்திரிசியார் கல்லூரி ஆங்கில மொழிச் சூழலில் பிதா லோங் அடிகளின் பொற்காலம் (GOLDENERA) உன்னத நிலையிலிருந்தாலும் தமிழ் மொழியின் கலை, கலாசார வளர்ச்சிக்கும் பெரும் தொண்டு புரிந்தார். அன்றைய சூழலில் ஆட்சி மொழி ஆங்கிலமாக இருப்பினும் தமிழ்மொழி வளர்ச்சிக்கு பல்வேறு வகையில் துணைபுரிந்தார்.

சிறந்த தமிழ் ஆசான்களைத் தேடி தமது கல்லூரியின் கல்விப் பணியில் ஈடுபடச் செய்த பெரு மையும் பிதாலோங் அடிகளைச் சாரும்.

ஈழ அன்னைக்கு புகழாரம் மீட்டிய மேதைகளான நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், தமிழ்த் தூதர் தனிநாயகம் அடிகள், கலாநிதி தாவீது அடிகள், முத்தமிழ்வித்தகர் விபுலானந்த அடிகள், தோலகட்டி முனிவர் தோமஸ் அடிகள் வரிசையில் தொண்டர்களுக்கு தொண்டராகத் திகழ்ந்தார் பிதா லோங் அடிகள்.

அதிபர் லோங் அடிகள் 1938 இல் முதன் முதலாக விமான நிதிக்கலை நிகழ்வும் நடத்தி உள்ளூர் கலைஞர்களின் படைப்பாற்றலை வெளி உலகிற்கு அறியச்செய்தார். ஒரு பானை சோற்றுக்கு ஓர் அவிழ் பதம் என்பதற்கு இற்றைக்கு எழுபது வருடங்களுக்கு முன் இலை மறை காய் போலிருந்த கலைஞர்களுக்கு உயிரூட்டம் அளித்தார்.

**துரை. ஆரோக்கியதாசன் B.A.P.G.D.E**
முன்னாள் பிரதி அதிபர்
பலாலி ஆசிரியர் கலாசாலை

தற்போது இடம்பெறும் கலைஞர்களை கௌரவிப்பிக்கும் முன்னோடியாக திகழ்ந்தார். எனது அருமைத்தந்தையும் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாண வரும் புகழ்பூத்த கலைஞர் அமரர் பிரான்சீஸ் துரையப்பா சலமோனின் கலைப்படைப்பிற்கு 'போட்டோ கிராபிக்புளக்' வெள்ளிப்பதக்கமும் சான்றிதழும் வழங்கப்பட்டது.

சான்றிதழில் பிதா லோங் அடிகள் ஏனைய பிரமுகர்களால் கையொப்பம் இடப்பட்டிருப் பதைக் கண்டு பரவச மடைந்தேன். இன்றும் அது என் வசம் உள்ளது.

*

# இராமேஸ்வரம் பகுதியினை சிறப்பு பாதுகாப்பு வலயத்துக்குள் கொண்டுவர தமிழக அரசு முடிவு

## தினமலர் தகவல்

(இராமேஸ்வரம்)

இராமேஸ்வரம் பகுதியை சிறப்புப் பாதுகாப்பு வலயத்துக்குள் கொண்டு வர தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இதனடிப்படையில் பல கோடி ரூபா செலவில் இங்குள்ள கடற்படை முகாமை விரிவுபடுத்தத்திட்டமிடப்பட்டுள்ளது. இது குறித்து தினமலர் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கையில் 1983 இல் ஏற்பட்ட கலவரத்தின் தொடர்ச்சியாக நாட்டின் பாதுகாப்புக் கருதி தமிழகக் கடல் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. தூத்துக்குடி முதல் கோடியாக் கரை வரை இந்தியக் கடற்படையின் ரோந்துப் பணியை தீவிரப்படுத்தும் முகமாக இராமேஸ்வரம், தொண்டி, நாகபட்டினம் போன்ற இடங்களில் கடற்படை முகாம்கள் ஏற்படுத்தப்பட்டன. கடற்படை மத்திய மாநில பாதுகாப்பு முகவர் நிலையங்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவந்தபோதிலும் கடத்தல் மற்றும் புலிகள் ஊடுருவலை இன்று வரை முழுமையாக தடுக்க முடியவில்லை.

பரந்த கடற்பரப்பைக் கொண்ட இராமநாதபுரம் மாவட்ட கடற்கரைப் பகுதியில் இருந்து புலிகள் இயக்கத்துக்கு தேவையான வெடி பொருட்கள், டீசல், மோட்டார் வாகன உதிரிகள் என பலவித பொருட்கள் இன்றுவரை இலங்கைக்கு கடத்தப்படுவது தொடர்ந்து வருகிறது. மன்னார் கடற்பரப்பை தங்களது கட்டுபாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ள புலிகளின் நடவடிக்கைகளை இலங்கை இராணுவம் அவ்வப்போது முறியடித்து வந்தாலும் இக் கடற்பரப்பில் புலிகள் கை தான் ஓங்கியுள்ளது. இதனால் புலிகளுக்கு தேவையான அனைத்துப் பொருட்களும் தமிழகத்திலிருந்து கொண்டு செல்வதற்கான வேலையில் புலிகளின் தரகர்களாக மீனவர்கள் சிலர் செயற்பட்டு வருகின்றனர்.

மேலும் இராமநாதபுரம் மாவட்ட கடலோரப் பகுதியில் எப்போது வேண்டுமானாலும் புலிகள் வந்து செல்லும் சூழல் உருவாகியுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு வரை தரை மற்றும் கடல் வழித்தாக்குதலில் மட்டும் சாகசம் காட்டிய புலிகள் தற்போது வான் வழித்தாக்குதலிலும் ஈடுபட ஆரம்பித்துள்ளதால் இவர்களது சிறிய ரக விமானம் சில நிமிடங்களில் தமிழகத்தை தொட்டு விட்டுத்திரும்பும் அபாயகரமான சூழ்நிலையும் உருவாகியுள்ளது. புலிகள் ஊடுருவல். கடத்தல் போன்ற பல்வேறு பிரச்சினைகளை மையப்படுத்தி பாக்கு நீரிணை மற்றும் மன்னார் வளைகுடா கடல் பகுதியில் பாதுகாப்பை பலப்படுத்த திட்டமிட்டுள்ள மத்திய அரசின் பாதுகாப்புத்துறை இராமநாதபுரம் மாவட்ட கடல் பகுதியில் கூடுதல் கவனம் செலுத்துகின்றது.

இராமேஸ்வரத்தை மையப்படுத்தி மத்திய மாநில அரசுகளின் அனைத்து உளவுப் பிரிவுகளும் இயங்கி வரும் நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக தொழில் நுட்ப கண்காணிப்பு பிரிவுகளும் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டுவருகின்றன. உச்சிப் புளி அருகே சக்திவாய்ந்த ராடர் மையத்தை அமைத்துள்ள விமானப் படையினர் வடக்கு மற்றும் தெற்கு கடற்பகுதியில் கண்காணிப்பை பலப்படுத்த வசதியாக மேலும் இரண்டு ராடர் மையங்களை அமைக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இராமேஸ்வரம் தீவுப் பகுதியை சிறப்பு பாதுகாப்பு வலயத்துக்குள் கொண்டு வர முடிவு செய்துள்ள அரசு பல கோடி செலவில் இங்குள்ள இந்திய கடற்படை முகாமை விரிவுபடுத்திடவும் வீரர்களின் எண்ணிக்கையை கூட்டவும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இக் கடற் பகுதியில் கடற்படை மற்றும் கடலோரக் காவல் படையின் 4 போர்க் கப்பல்கள் ரோந்து வரும் நிலையில் கடற்படை முகாம் விரிவாக்கத்துக்கு பின் கப்பல்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் திட்டமிட்டுள்ளது. இது போன்ற நடவடிக்கையினால் இக்கடல் பகுதியில் எதிர்காலத்தில் சுதந்திரமாக மீன் பிடித்தொழில் செய்ய முடியாத நிலை உருவாகுமோ என்ற அச்சமும் தற்போது மீனவர்கள் மத்தியில் நிலவி வருகிறது.

(அ-5)

வாழ்க்கை - இயற்கை அளிக்கும் செல்வம்
ஆனால் - நல்ல வாழ்க்கை அறிவு அளிக்கும் செல்வம்.

- கிரீஸ்

வலம்புரி

## கைதடி சித்த மருத்துவத்துறையில் நடைபெறும் சித்த மருத்துவக் கண்காட்சி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவத் துறையினரின் சித்த மருத்துவக் கண்காட்சி இடம்பெற்று வருகிறது.

சித்த மருத்துவம் பற்றிய பல்வகைச் சிறப்புக் களை வெளிப்படுத்தி நிற்கும் இக் கண்காட்சி சித்த மருத்துவத்துறை சார்ந்தவர்களின் கடின உழைப்பின் பெறுமானமாக இருப்பதைக் காண முடிகின்றது.

இன்றைய ஆங்கில மருத்துவ மோகத்தின் மத்தியிலும் சித்தர்கள் தந்த தமிழ் மருத்துவத்தைப் பேணிப் பாதுகாப்பதில் உழைக்கின்ற ஒவ்வொருவரினதும் பணி போற்றுதற்குரியது.

தமிழர்கள் கண்ட சித்த மருத்துவத்தின் பெருமைகளையும் அதன் பக்க விளைவற்ற சிறப்பினையும் இளம் சந்ததியினர் அறியும் வகையில் இத்தகைய கண்காட்சிகள் காலத்தின் தேவையாகவுள்ளன.

இயற்கையாக கிடைக்கக் கூடிய இலை வகைகள் முதல் சிறு தானியங்கள், பழ வகைகள் என்பன நம் உடலுக்கும் உயிருக்கும் ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் தருகின்றன.

இது தவிர ஆங்கில மருந்துகளை உட்கொள்வதனால் ஏற்படக்கூடிய பக்க விளைவுகளை தவிர்ப்பதற்கும் தேவையற்ற செலவுகளை விலக்குவதற்கும் சித்த மருத்துவத்தை நாடுவது சிறப்பானதாகும்.

யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகத்தில் சித்த மருத்துவத்துறையை உருவாக்கிய பெருந்தகைகள் உண்மையில் போற்றுதற்குரியவர்கள்.

சித்த மருத்துவத்துவத்தை பல்கலைக்கழகக் கற்கை நெறியாக மாற்றியமைத்ததன் மூலமாக இன்று இளைஞர் யுவதிகள் சித்த மருத்துவத்தை கற்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இதனை எமது சித்த மருத்துவத்தின் நீண்ட ஆயுளுக்கு ஆரோக்கியமான செயற்பாடாக கொள்ளலாம்.

அதேநேரம் சித்த மருத்துவத்தின் சிறப்புக்கள் மக்களை குறிப்பாக இளம் சந்ததியினரை சென்றடைவதற்கான பிரசார நடவடிக்கைகளும் கட்டாய தேவையாகவுள்ளது.

அதில் ஒன்றாக கைதடி சித்த மருத்துவத் துறையில் இடம்பெறும் சித்த மருத்துவக் கண்காட்சியை கருதிக் கொள்ளலாம்.

கடந்த சில தினங்களாக இடம்பெற்றுவரும் இக் கண்காட்சியை பொதுமக்கள் சென்று பார்வையிடுவதில் ஏ-9 பாதையில் இடம்பெறக் கூடிய வீதித் தடைகள் பெரும் அசௌகரியமாக இருப்பது மிகப் பெரும் துரதிர்ஷ்டமே.

இருந்தும் இன்றும் நாளையும் இடம்பெறும் சித்த மருத்துவக் கண்காட்சியை பார்த்துப் பயன் பெறுவதற்கு பொதுமக்கள், மாணவர்கள் முன் வரவேண்டும்.

அப்போதுதான் பலரின் உழைப்பில் உருவாக்கப்பட்ட கண்காட்சியின் பயன் பலரையும் சென்றடையும்.

# சித்த மருத்துவத்தில் சிவனும், சீவனும்

சிவன் என்னும் சொல் முதன் முதல் எந்த நூலில், எந்த மொழியில் காணப்படுகிறது என்பது ஆராய வேண்டியதாகும். புறநானூறு போன்ற மிகப் பழைய நூல்களில் சிவன் என்ற சொல் காணப்பெறவில்லை.

ஆனால் சிவபெருமானைக் குறிக்கும் மற்றும் பெயர்கள் சிலது புற நானூறில் காணப்படுகின்றன. சைவ சித்தாந்தமும் ஆகம நூலும் தமிழருக்கேயுரியதாய் இருந்தும் சிவன் என்ற சொல் பழைய தமிழ் சங்க நூல்களில் காணப்படாமை ஆராயப்பட வேண்டியதாகும்.

வரலாற்றுக் காலத்திற்கு முன்பு வழக்கத்திலிருந்த ஆகம நூலின் கருத்துக்களை தென்னகத்தில் திவாடுதுறையில் முதன் முதலாக இனிய தமிழில் திருமூலர் தனது திருமந்திரத்தில் 9 தந்திரங்களாக வகுத் துப் பாடினார். அச்சமயம் பிற மொழி ஆட்சியான படியால் திருமந்திரமும் கி.பி. 600 வரையில் மறைந்து கிடந்தது. பின்னர் திருமந்திரம் செல்வாக்குப்பெற்ற காலத்தில் சிவன், சைவ சித்தாந்தம் என்னும் சொல்லாட்சிகள் மீண்டும் வழக்கிலே வெளிவந்தன.

மேலும் சிவனை கடவுள் என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர். கடவுள் என்ற தனித்தமிழ் என்ற சொல்லின் பொருளிலேயே சைவ சித்தாந்தக்கருத்தும் பெரிதும் அடங்கியுள்ளது. கடவுள் என் பது தனித்தமிழ் சொல். அது புறநானூறு, தொல் காப்பியம் போன்ற மிகப் பழைய தமிழ் நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடவுள் என்ற சொல்லுக்கு பொதுவாக மூன்று விதமாக பொருள் கூறலாம். ஒன்று கடவுள் என்றால் இயக்குதல் , அடுத்தது கடவுள் என்பதற்கு உள்ளத்தை கடந்தவர் என பொருள் கூறுவதுண்டு.

மூன்றாவது விதம் கடவுள் உலகைக் கடந்தவர் அதே சமயம் உலகுள்ளும் உள்ளவர் எனக் கொள்வது. உலகிலுள்ளும், உயிர்கலுள்ளும். வியாபித்து நிற்கும் நிலையை "உள்" என்ற சொல்லும் அவற்றை கடந்து நிற்கும் நிலையைக் "கட" என்ற சொல்லும் குறிக்கும். உலகை இயக்குபவன் இறைவன் அவன் உலகம் எங்கும் நிறைந்தவன் அதேசமயம் அவன் உலகைக்கடந்து நிற்பவனும் ஆவான்.

கடவுள் என்ற சொல்லிலே அடங்கியிருக்கும் இக்கருத்துக்கள் யாவும் சைவ சிந்தாந்தம் கூறும் கருத்துக்களாகும்.

### சீவன் என்னும் சொல்

சீவன் என்னும் சொல் மருந்துவத்தில் உயிர்த்தாது நாடி என்பன பற்றி குறிப்பிடப்படும். சைவ சித்தாந்த நோக்கில் சிவன் முத்தொழிலைப்புரிபவர். "சிவம்" என்னும் பரம்பொருள்தானே பிரமா ,விஷ்ணு உரித்திரனாக நின்று முறையே படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்களைச் செய்யும் பொருட்டு உருவத் திருமேனிகளைக் கொள்கின்றது.

சித்த மருத்துவத்தில் கூறப்படும் 96 தத்துவத்தில் முக்கிய உயிர்த்தாது வாகிய வழி, அழல், ஐயம் ஆகியவையும் முத்தொழில்களை (படைத்தல், காத்தல், அழித்தல்) செய்து வருகின்றன சித்தர்கள் உயிர்த்தாதுவைச் சீவன் என்று குறிப்பிட்டிருப்பதை முன்னர் காணலாம். இதனை சிவம் உயிருக்கு உயிராகி நிற்கும் நிலை எனலாம்.

இத்தத்துவத்தை தேரையர் என்ற சித்தர்

"வாதமாய்ப் படைத்துப் பித்த வன்னியாய் காத்துச் சேட்ப
சீதமாய்த் துடைத்துப் பாராந் தேகத் திற்குடியா மைந்து
பூதவிந்தியாமைவர் பூசை கொண்டவர் பால் விந்து
நாதமாய் கிருட்ண மூர்த்தி நமக் கென்னும் துணையாவாரே" என்கிறார்.

இறைவன் தனது மூன்று சக்திகளால் பிரம்மா, மகேஸ்வரன் உருத்திரன் ஆகியவர்களால் படைத்தல், காத்தல், அழித்தல் தொழிலைச் செய்வது போல் உயிர்த்தாதுவாகிய சீவன் மூன்று தத்துவங்களாக பிரிந்து வழி, அழல், ஐயம் முறையே படைத்தல், காத்தல், அழித்தல் தொழிலைச்செய்வதாக கூறப்படுகின்றது.

சுதேச மருத்துவக் கோட்பாடுகளில் உயிர்த்தாது அல்லது முத்தோடங்களின் காலம் பற்றிக் குறிப்பிடுகையில் காலையில் வாதமும் மதியம் பித்தமும், மாலையில் ஜயமும் எனவும் அதே போல் முறையே இளமை, நடுவயது முதுமையாகவுள்ள காலங்களில் மேற்குறிப் பிட்ட படி உயிர்த்தாது இருப்பதை சித்த மருத்துவம் குறிப்பிட்டுக் கூறுகின்றது.

மேற்குறிப்பிட்ட தேரையரின் ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற தத்துவக் கொள்கையை ஆராயுமிடத்து சித்த மருத்துவக் கோட்பாட்டில் கூறிய வாத ,பித்த, ஜய என்ற ஒழுங்கு முறை சரியானது என நிரூபணம் செய்வதாக அமைகின்றது.

இதேபோல் நாம் மேற்கூறிய ஆக்கல், காத்தல் தொழிலை பிண்ட உற்பத்தியிலும் (கரு உற்பத்தி காணக்கூடியதாக இருக்கின்றது.

Dr. பொன் இராமநாதன் M.D.(S),Ph.D
சிரேஷ்ட விரிவுரையாளர்,
சித்த மருத்துவத்துறை,
யாழ் .பல்கலைக்கழகம்,கைதடி.

பிண்ட உற்பத்தி விந்து நாதத்துடன் சேரும்போது பித்தமும், வாயுவும் உட்செல்வதாக கருதப்படுவதால் இவற்றிலிருந்து உற்பத்திக்கு வாயுவும் அவை நிலைத்திருப்பதற்கு சூடாகிய பித்தமும் உதவுகின்றன எனக் கொள்ளலாம்.எமது உடலில் உயிர் நிலைத்திருக்கும்வரை சூடு இருக்கும். உயிர் பிரிந்தால் சூடு வெளியேறி உடல் குளிர்ந்து விடும். இதனிலிருந்து காத்தல் தொழிலுக்கு பித்தம் அவசியம் என்பதை அறிந்து கொள்ளலாம். இவற்றிலிருந்து கரு உற்பத்தியில் ஆக்கல், காத்தல் ஆகிய தத்து வத்தைக் காணக்கூடியதாக உள்ளது.

மேற்கூறிய சிவனின் முத்தொழில்களைஎமதுஉடம்பில்உள்ளஉயிர்த்தாதுக்களும் ஆற்றுவதால் சிவனே சீவனாகவும் இருந்து ஆன்மாவைச் செயல் படுத்துகின்றது என்பது புலனாகின்றது. அத்துடன் சித்தர்களின் சீவன், சிவன் என்பது பற்றிய மருத்துவ சிந்தனைகட்கும் சைவ சித்தாந்தம் கூறும் முத்தொழில் கோட்பாட்டிற்குமிடையே நெருங்கிய தொடர் பிருப்பதனையும் இவை விளக்கி நிற்கின்றன.

# பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் உபதலைவராக பேரா.ஜிவ்றி நியமனம்

தற்பொழுது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவில் ஓர் அங்கத்தவராக இருக்கும் சிரேஷ்ட பேராசிரியர் எம்.ரி. எம்.ஜிவ்றி, ஏப்ரல் 2008 முதல், ஆணைக்குழுவின் புதிய உபதலைவராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராசிரியர் ஜிவ்றி தனது ஆரம்பக் கல்வியை மாத்தறை சென்.சேர்வற்றியஸ் மற்றும் சென்.தோமஸ் கல்லூரிகளிலும் உயர்கல்வியை காலி மஹிந்த கல்லூரியிலும் கொழும்பு-ஆனந்தா கல்லூரியிலும் கற்றார்.

இவர் தற்பொழுது ஸ்ரீஜெயவர்த்தன புர பல்கலைக்கழகத்தில் வகிக்கும் பதவிக்கு முன்னர் பேராதனை மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களில் நிர்வாகி, கல்வியியலாளர், ஆராய்ச்சியாளர் எனப் பல பொறுப்பு களில் 30 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியுள்ளார். ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் வைத்திய விஞ்ஞான பீடத்தின் ஆரம்பகால பீடாதிபதியாகவும் வைத்தியக் கல்வி மற்றும் சுகாதார விஞ்ஞானத் துறைத் தலைவராகவும் அத்துடன் அதே பல்கலைக்கழகத்தில் உடற்கூற்றியலின் ஆரம்பகால பேராசிரியராகவும் பணியாற்றினார். தற்பொழுது நிதிக் குழுவில் ஓர் அங்கத்தவராகவும், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் ஆலோசக ராகவும் பணியாற்றுகின்றார்.

பேராசிரியர் ஜிவ்றி 1994 முதல் 2001 வரை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வின் அங்கத்தவராகவும் அத்துடன் உபதலை வராகவும் பணியாற்றியுள்ளதுடன் உயர் கல்வியில் பரந்த அனுபவமும் உடையவர். (ஓ)

## திருநாவுக்கரசர் குருபூசை

இந்து சமய கலாசார திணைக்களம், வலிகாமம் பிரதேசத்தில் நடாத்தும் திருநாவுக்கரசர் குருபூசை நாளை பிற்பகல் 1.30 மணிக்கு சீரணி நாகம்பாள் அறநெறிப்பாடசாலையில் நடைபெறும்.

அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் சண்முகதாஸ் கலந்து கொள்கிறார். சிறப்பு விருந்தினராக மனோன்மணி சண்முகதாஸ் கலந்து கொள்கிறார். (ச)

## ஈழத்து இராமேஸ்வரத்தில் இன்று தேர்த் திருவிழா

ஈழத்து இராமேஸ்வரம் என வழங்கும் புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் தேவஸ்தான தேர்த் திருவிழா இன்று காலை 10 மணிக்கு நடைபெறும். முன்னதாக காலை 9 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெறும். நாளை தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

இதேவேளை தேர்த் திருவிழாவில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கு வசதியாக இன்று காலை 7.30 மணிக்கு யாழ்.சத்திரச்சந்தியிலிருந்து விசேட வாகன சேவை இடம்பெறும். (ச)

## ஓலைச் சுவடிகள் 22
## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்
### நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

**இறைவனை வணங்கி திரும்புமுன் ஏன் தீர்த்தம் அருந்த வேண்டும்?**

கோயில் தொழுது விட்டு திரும்பி வருமுன் தீர்த்தம் வாங்க வேண்டும் என்றும் அதன்பின் பிரசாதம்ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும்கூறுவதுண்டு.

தெய்வ அம்சத்தை மந்திர ஒலியுடன் அபிஷேகம் செய்தெடுத்த நீரே தீர்த்தமாக பக்தர்களுக்கு வழங்கப்படுகின்றது. நம்பிக்கை மற்றும் சாஸ்திரத்தின் இரண்டு குணங்களும் அடங்கியதே தீர்த்தம். தெய்வ விக்கிரகத்தின் ஸ்பரிசத்தாலும் மந்திர ஒலிகளாலும் புனிதமாக்கப்பட்ட பரிசுத்தம் முதலாவது குணம். துளசி முதலிய மூலிகைகளின் மருத்துவ குணங்களே இரண்டாவது.

வலது கையின் ஐந்து விரலும் மடங்கும் போது உண்டாகும் கைக்குழியில் தீர்த்தம் வாங்க வேண்டும் என்பது விதி. கைக்குழியை அப்படியே உயர்த்திப் பிடித்து கையில் உயர்ந்து காணப்படும் சந்திர மண்டலத்துக்கும் சுக்கிர மண்டலத்துக்கும் மத்தியிலுள்ள இடுக்கு வாயிலாக தீர்த்தம் அருந்த வேண்டும்.

இவ்வாறு தீர்த்தம் அருந்துவதனால் நன்மைகள் பல உண்டு என்பதை மேல் நாட்டு ஆராய்ச்சிகளும் ஒப்புக்கொண்டுள்ளன. தீர்த்தங்களில் சேர்க்கும் துளசி , குவளை , தாமரை, மந்தாரை, தெற்றி, மஞ்சள் என்பவையின் மருத்துவ குணங்களால் முக்கியமாக இரத்த ஓட்டம் உணர்வடைகின்றது. இரத்தத்திலுள்ள அசுத்தங்களை அகற்றி உடலை சுத்திகரிக்கின்றது. இந்துமத ஆசாரத்தில் தீர்த்தம் அருந்துவதின் அவசியத்தைப்பற்றி விளக்கமுண்டு. பொதுவாக உதடுகளில் உமிழ்நீர் இல்லாவிட்டாலும் வாய்க்குள் உமிழ் நீர் இருக்கும். வாய்க்குள் நாவின் அசைவின் விளைவாக உதடுகளும் எச்சிலாக மாறும். அதனால் உதடுகளை வாய்க்குள் செலுத்தி விட்டு தீர்த்தம் அருந்த வேண்டும் இரு உதடுகளும் தொடுவதைத் தவிர்க்க வேண்டும்.

# விடுதலைப்புலிகளின் குண்டுத் தாக்குதல்கள் பின்னடைவை ஏற்படுத்தப் போவதில்லை

## பிரதமர் ரட்ணசிறி கூறுகின்றார்

(கொழும்பு)

தென்பகுதியில் புலிகளினால் நடாத்தப்படும் குண்டுத் தாக்குதல்கள் அரசாங்கத்திற்கோ அல்லது படையினருக்கோ பின்னடைவை ஏற்படுத்தப் போவதில்லை. புலிகளின் தலைவர் பிரபாகரனின் வாழ்க்கை வரையறுக்கப்பட்டுள்ளது என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

நடனக் கலைஞர்களுக்கு நர்த்தனதாரி என்ற பெயரில் காப்புறுதிச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை ஜோன் டி சில்வா மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் பிரதமர் கூறியதாவது, தென் பகுதியில் பல இடங்களில் குண்டுகளை வெடிக்கச் செய்து மக்களின் சிவில் வாழ்க்கையை சின்னாபின்னமாக்கி வரும் விடுதலைப்புலிகள் ஒன்றை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகளால் அரசாங்கத்தின் நடவடிக்கைகளையோ படையினரின் நடவடிக்கைகளையோ பின்னடையச்செய்ய முடியாது. இவ்வாறான செயல்களை காணும் போதெல்லாம் எமது இரத்தம் சூடாகின்றது.

நான் இன்று பிரபாகரனுக்குச் சொல்ல விரும்புவது என்னவென்றால் அவரின் விதியைத் தீர்மானிக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை என்பதாகும்.

விடுதலைப் புலிகளின் இவ்வாறான விளையாட்டுகளுக்கு வரையறை இருக்க வேண்டும். இவ்வாறான விளையாட்டுக்கள் எல்லை தாண்டுமானால் படையினரின் எல்லை வரையறைகளும் மீறிச் செல்ல முடியும்.

பிரபாகரன் ஒழிந்துள்ள இடத்தைத் தேடி எமது படையினர் தாக்குதல்களை நடத்துவார்கள். இவ்வாறான தாக்குதலுக்கு எமது முழுமையான ஆசீர்வாதம் வழங்கப்படும். பின்நோக்கிச் செல்ல மாட்டோம்.

நாம் ஒரு கொள்கை கோட்பாட்டுடனேயே இருக்கின்றோம். ஒருபுறம் அரசாங்கம் கலைகளையும் கலாசாரத்தையும் பாதுகாக்கும் அதேவேளை எமது தாய் நாட்டையும், சுயாதிபத்தியத்தையும் பாதுகாக்கப் படையினர் போராடி வருகின்றனர்.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தி வளமான நாட்டை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கம் என்றார் பிரதமர். (ச-5)

## வெடிப்ப...

பயணி ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இக் குண்டை மீட்டதாக தெரிவித்த கல்கமுவ பொலிஸார் வெடிப்பதற்கு சில நிமிட்ங்களுக்கு முன்னதாகவே அதனை மீட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

குண்டு மீட்கப்பட்ட பஸ்ஸில் அதிகளவு பயணிகள் இருந்தனர் என்றும் குண்டு வெடித்திருந்தால் பாரிய அழிவுகள் ஏற்பட்டிருக்கும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நான்காம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்த பின்னர் நேரக்கணிப்புக் குண்டொன்று போர்க்களத்திற்கு வெளியே மீட்கப்பட்டிருப்பது இதுவே முதற்தடவை என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இக்குண்டு பின்னர் செயலிழக்க வைக்கப்பட்டுள்ளது. (ச-5)

## யாழ்ப்பாண...


நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (ச-5)

## அமைச்சர்...

மடுத்தேவாலயத்தையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் அமைச்சர் பார்வையிட்டுள்ளார். அத்துடன் இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனரமைப்பு பணிகள் குறித்தும் அக்குழு ஆராய்ந்துள்ளது. ஜனாதிபதியின் விசேட பணிப்பின் பேரிலேயே அமைச்சர் இங்கு விஜயம் செய்திருந்தார்.

இதேவேளை இராணுவ அதிகாரிகளின் அழைப்பின் பேரில் மன்னார் குரு முதல்வர் வணபிதா விக்டர் சூசை அடிகளார் கடந்த சனிக்கிழமை மடுத்தேவாலயத்தை சென்று பார்வையிட்டதாகவும் வடபுல செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன. (ச-5)

# ஈரானிய அதிபரின் வருகையால் வீதிகள் சில மணி நேரம் மூடப்பட்டது



(கொழும்பு)

ஈரான் அதிபர் மஹ்மூத் அகமட் நிஜாத் இரண்டு நாட்கள் அரச பயணமொன்றினை மேற்கொண்டு நேற்று மாலை கொழும்பு வந்திருக்கிறார். பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளிற்கு மத்தியில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த, ராஜபக்ஷ ஈரானிய அதிபரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு சென்று செங்கம்பள வரவேற்பினை வழங்கினார்.

அத்துடன் அவருக்கு அங்கு வைத்து 21 துப்பாக்கி மரியாதை வேட்டுக்களுடன் கூடிய கடற்படையினரின் அணிவகுப்பு மரியாதையும் வழங்கப்பட்டது. ஜனாதிபதி மாளிகையிலே இரு நாட்டு தலைவர்களுக்கும், அவர்களின் தூதுக்குழுவினருக்கும் இடையில் விரிவான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்றைய தினம் மொனராகல மாவட்டத்தின் வெள்ளவாய பகுதியில் அமைந்துள்ள உமா ஓயாவில் சுமார் 450 மில்லியன் டொலர்கள் செலவில் ஈரானிய நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ள 100 மெகாவாட் நீர்-மின் நிலையத்தினையும் தொடங்கிவைக்கவுள்ள ஈரானிய அதிபர் மஹ்மூத் அகமட் நிஜாத் இன்று நண்பகல் இந்தியா பயணமாகிறார்.

இதேவேளை இலங்கைக்கு பயணம் செய்துள்ள ஈரானிய ஜானதிபதி மஹ்மூத் அகமட் நிஜாத்தை அழைத்து வருவதற்கு கொழும்பு-நீர்கொழும்பு பிரதான வீதி நேற்று மாலை 7.00மணிமுதல் மூடப்பட்டதால் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக எந்தவொரு பொதுமகனும் மேற்படி வீதியில் நடமாடக் கூடாது என ஜனாதிபதி பாதுகாப்பிற்கு பொறுப்பான கொமாண்டோப் படையினர் கடும் உத்தரவு பிறப்பித்து விட்டு வீதிகளில் நிலை கொண்டிருந்தனர்.

இதனால் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கினர். பிரதான வீதிகளில் சென்ற அனைத்து வாகனங்களும் மாலை 7.00 மணியுடன் இடை மறிக்கப்பட்டு குறுக்கு வீதிக்குள் திசை திருப்பப்பட்டன. (ச-5)

# எழுத்து மூலமான உத்தரவாதத்தின் பின் மாதா சிலை மடுவுக்கு எடுத்து வரப்படும்

## குருமார்கள் கூட்டத்தில் முடிவு

மடுத்தேவாலப் பகுதி, சமாதான வலயமாக அறிவிக்கப்படுகின்ற உத்தரவாதம் கிடைத்த பின்னரே மடுமாதா திருச்சொரூபம் ஆலயத்துக்கு கொண்டுவரப்படும் என மன்னார் மறைமாவட்ட குருமார் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மடுப்பகுதியை இராணுவம் சில நாட்களுக்கு முன் கைப்பற்றியதை அடுத்து மடு மாதா தேவாலயத்திலிருந்து சமீபத்தில் அப்புறப்படுத்தப்பட்ட மடுமாதாவின் திருச்சொரூபத்தை மீண்டும் அங்கு கொண்டு வர வேண்டும் என்ற பிரச்சினை குறித்து ஆராய திங்களன்று மன்னார் மறைமாவட்ட குருக்கள் மன்னாரில் கூடினர்.

மடுத்தேவாலயப் பகுதியை சமாதான வலயமாக அறிவித்து அங்கு இடம்பெயர்ந்த மக்கள் வாழ்வதற்கு அனுமதியளிக்க இராணுவத்தினரும், விடுதலைப் புலிகளும் எழுத்துமூல உத்தரவாதம் வழங்கிய பின்னரே மாதா சிலையை மீண்டும் மடுவுக்கு கொண்டு வருவது என்று இக்கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (ச-5)

## மலையகப் பகுதிகளில் மண்...

கேகாலைமாவட்டத்தின் எட்டியாந்தோட்டையில் நேற்றுக்காலை ஏற்பட்ட மண்சரிவில் பெண்ணொருவர் உயிரிழந்தார். மேலும் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர். அப் பகுதியில் க்டும் மழை தொடர்ச்சியாகப் பெய்து வருவதால் மண் சரிவு அபாயம் தொடர்வதாகப் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் பாதுகாப்பற்ற பகுதிகளில் உள்ள மக்களை பாதுகாப்பான இடங்களை நோக்கி நகருமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அதேநேரம் இரத்தினபுரி மாவட்டத்தில் கடும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. மாணிக்கக்கல் சுரங்கம் ஒன்றிற்குள் பணிபுரிந்து கொண்டிருந்த 6 பேர் நேற்று பிற்பகல் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர்.

இவர்கள் நேற்று மாலை வரை மீட்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. அப்பகுதியில் உள்ள மாணிக்கக்கல் சுரங்கத்திற்குள் மேலும் பலர் அகப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

வெள்ளம் ஆற்றுடன் கலந்து பெருக்கெடுத்து ஓடுவதால் ஆபத்தான பகுதிகளுக்கு எவரையும் செல்லவேண்டாம் என பொலிஸார் அவசர எச்சரிக்கையை விடுத்துள்ளனர். (ச-5)

## முகமாலை மோதலில்...

பட்டுள்ளன.

தற்போது கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களின் படி 130 புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டதுடன் 300 க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்து தற்போது மல்லாவி, மாஞ்சோலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேச வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட சடலங்களில் பல சடலங்கள் சிறார்களுடையது என்பது உறுதியாகியிருக்கிறது. அப்பாவிப் பெற்றோர்களின் பிள்ளைகளை ஒரு போதும் வெற்றிகொள்ள முடியாத யுத்தத்தில் பலியிட்டு தமது இருப்புக்காக புலிகளின் தலைமைத்துவம் தமிழினத்தை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்கிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அவ் அறிக்கையில் முகமாலைத் தாக்குதலில் கொல்லப்பட்ட விடுதலைப்புலி உறுப்பினர்கள் எனக் குறிப்பிட்டு 130 பேரின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளது. (ஏ)


## அன்பான வேண்டுகோள்!

## மருத்துவ மூலிகைக் கண்காட்சி

கைதடி சித்த மருத்துவத் துறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூலிகை மருத்துவக் கண்காட்சி இன்னும் இருதினங்கள் (29ம் திகதி, 30ம் திகதி) மட்டுமே நடைபெறும்.

இக் கண்காட்சியை பார்க்க விரும்பும் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோரின் பிரயாணக் கஷ்டங்களைத் தவிர்க்கும் முகமாக காலை 9 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்கு முன்னதாகவும் இங்கு வருகை தருமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

பிரவேசக் கட்டணம் 10/=

சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம்.

(C-1075)


## போர் தளபாடக் கொள்...

இலங்கையின் பாதுகாப்புத்துறையினர் ஆயுதங்கள், போர் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்காக 100 மில்லியன் டெரலர்களை (இந்தியன் ரூபா 400கோடி, இலங்கை ரூபா சுமார் ஆயிரத்து 100 கோடி) குறைந்த வட்டியிலான கடனாக இந்தியா வழங்கவுள்ளதாக எக்கொனமிக்கல் ரைம்ஸ் என்ற சஞ்சிகை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளது.

குறைந்த மட்டத்திலான வளர்ச்சியடைந்த நாடுகளின் தரத்தில் இலங்கை இல்லை என்ற போதிலும் 2சதவீத வட்டி வீதத்தில் அதிகளவு சலுகையுடன் கடனை வழங்குவதற்கு இந்தியா இணங்கியுள்ளது.

இதேவேளை ரயில் பாதை அபிவிருத்தித் திட்டங்களுக்காக மற்றொரு தொகையாக 100 மில்லியன் டொலர்களையும் இலங்கை இந்தியாவிடமிருந்து பெற்றுக் கொள்ளவுள்ளதாகத் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

2008 நிதியாண்டுக்காக இரு தரப்பு வட்டி வீதம் குறைந்த சலுகைக் கடன்களை வழங்குவதற்கு 500 மில்லியன் டொலர்களையே இந்தியா ஒதுக்கீடு செய்துள்ளது. இத் தொகையுடன் ஒப்பிடும்போது இலங்கைக்கு 200 மில்லியன் டொலர்களைச் சலுகைக் கடனாக வழங்குவது ஒப்பீட்டளவில் பாரிய தொகை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயத்தை இந்திய வெளிவிவகார அமைச்சின் முதலீட்டு வர்த்தக மேம்பாட்டுப் பிரிவு இதுவரை கையாள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசியல் ரீதியான உணர்வுகளுக்கு இடமளிக்கும் இந்த விடயம் குறித்து இந்திய அதிகாரிகள் எவரும் கருத்துத் தெரிவிக்க முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1, இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.04.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.